Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1187)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 18 செவ்வாய்க்கிழமை (03.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 94


நிதி நெருக்கடி 13


எனக்கு குறைவு 10


விரைவில் அனுமதி 05


விலகினார் 07

# இந்தியா சார்ந்த நலன்களை இலங்கை மீது திணிக்க முடியாது

## வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு



(புதுடில்லி)

இந்தியாவின் நலன்களை இலங்கை மீது திணிக்க முடியா தெனவும், இந்தியா பாதுகாப்பு ரீதியாக, இலங்கையில் தங்கியிருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலிருந்து வெளியாகும் Business Standard என்னும் இதழுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தியா இலங்கையின் எந்தவொரு குழுவிற்கும் உதவிகளை வழங்கவில்லை.

பிரபாகரனின் ஆதிக்கம் பலமாக காணப்பட்ட காலத்திலும் இலங்கையுடன் இந்தியா உறவுகளைப் பேணி வந்தது. அத்துடன், இலங்கையில் பாதுகாப்புக் குறித்த பாரிய கவலைகள் உள்ளன. அவை இந்தியப் பெருங்கடலில் இவ்விரு நாடுகளையும் பெரிதும் பாதிக்கக் கூடியவை எனவே இந்தியா தொடர்ந்தும் இலங்கையை வலது புறமாக வைத்துப் பார்க்கவே (15ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து நாள் காய்ச்சல் மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த உயர் தரம் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வந்த மாணவன் ஒருவர் ஐந்து நாள் காய்ச்சல் காரணமாக நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கிளிநொச்சி முறிப்பைச் சேர்ந்த புஸ்பராசா பிரவீனன் (வயது-17) என்ற க.பொ.த. உயர்தர மாணவனே இவ்வாறு உயிரிழந்வராவார்.

பாடசாலை விடுமுறை ஆதலால் குறித்த மாணவன் முறிப்பில் தங்கியிருந்த சமயம் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். கடந்த புதன்கிழமை இவர் சிகிச்சைக்கென கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் (15ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப்பொருள் வெடித்து சிறுவன் ஸ்தலத்தில் பலி

(அக்கரைப்பற்று)

பந்து என நினைத்து எறிந்து விளையாடிய மர்மப் பொருள் வெடித்ததில் சிறுவனொருவன் உயிரிழந்ததுடன் மற்றுமொரு சிறுவன் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பிரதேச பதூர் நகர் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரும்புப் பந்து என நினைத்து இரு சிறுவர்களும் மாறி மாறி எறிந்து விளையாடிக் கொண்டிருந்த போதே இது வெடித்துள்ளது.


இவ் வெடிப்புச் சம்பவத்தில் பதூர் நகரைச் சேர்ந்த நிவாஸ் (வயது-12) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்த இக்கினாஸ் (வயது-16) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காணி, பொலிஸ் அதிகாரங்களின் வரையறை குறித்து பேசத் தயார்

### கூறுகிறார் அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களின் சில எல்லைகள் மற்றும் வரையறைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ள தென ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்தத் தயாரென அரசாங்க பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளதாக வெளிவரும் தகவல்கள் குறித்து தெளிவுபடுத்துகையிலேயே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் தீர்வு செயற்பாட்டில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதில் அரசாங்கத்துக்கு கொள்கையளவில் மிகப்பெரிய சிக்கல் காணப்படுகின்றது. எந்த விடயம் குறித்து பேசுவதாக இருந்தாலும் (15ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகள்; வடமராட்சிக் கடலில் வலைகள் நாசம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை ஊடுருவிய இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் உள்ளூர் மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகளை வெட்டிச் சேதப்படுத்தியுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் மீனவர்களால் முறையிடப்பட்டுள்ளது.

வடமராட்சி-பருத்தித்துறை, சுப்பர்மடம் கடற்பரப்பிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஐந்து படகுகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குறித்த பகுதி மீனவர்களின் வலைகள் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளால் வெட்டிவிடப்பட்டும், சேதப்படுத்தப்பட்டும் கடலில் விடப்பட்டிருப்பதாகவும் இவ்வாறு வெட்டப்பட்ட, சேதப்படுத்தப்பட்ட வலைகளைத் தேடும் நடவடிக்கையில் குறித்த ஐந்து படகுகளும் நேற்று மாலை வரை ஈடுபட்டன.

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் அத்துமீறல் நடவடிக்கை தொடர்ந்தும் வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் பருத்தித்துறை முனைக் (15ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சின் முன்னேற்றம் குறித்து ராஜதந்திரிகளுக்கு விளக்கப்படும்

(கொழும்பு)

அரசுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களின் முன்னேற்றம் தொர்டர்பாகவும் மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்தும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கிக் கூறவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு அரசு எடுக்க வேண்டிய நடவ டிக்கைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

இதன்போது அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக, மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வட, கிழக்கு மீள் இணைப்பு றிசாட் பதியுதீன் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படும் யோசனையை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வன்மையாக எதிர்க்குமென கட்சியின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இயங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர் இது தொடர்பில் முஸ்லிம் வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இருக்க (15ஆம் பக்கம் பார்க்க)


## பணமோசடியில் ஈடுபட்ட போலி முகவர் யாழ்:பொலிஸாரிடம் வசமாக சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை 46 இலட்சம் ரூபா செலவில் கனடாவிற்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த நீர் கொழும்பு வாசியான போலி முகவர் ஒருவர் நேற்று யாழ். பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

குறித்த நபர் தற்சமயம் யாழ். பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. குறித்த சம்பவம் குறித்து தெரியவருவதாவது, காரைநகரைச் சேர்ந்த குறித்த இளைஞரை வெளிநாட்டுக்கு (கனடா) அனுப்பி வைப்பதற்காக உள்ளூரில் வசித்து வரும் நபர் ஒருவரது உதவியுடன் இளைஞரது பெற்றோர் முயற்சி மேற்கொண்டனர். இதன் மூலம் (15ஆம் பக்கம் பார்க்க)

# வலி.மேற்கில் வாழ்வியல் பிரச்சினைகள் அமைச்சர் டக்ளஸ் மக்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள பொது மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் குறித்து ஆராயும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வடக்கின் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்து வரும் மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதன் மூலம் அம்மக்களின் வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக நேற்றைய தினம் இச்சந்திப்பு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது அப்பகுதி மக்களால் பல்வேறு தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக வீட்டுத் திட்டக் கோரிக்கைகள் மற்றும் குறையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளை முழுமையாக்கும் படியிலான கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டன.

இம்மக்களது பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பதற்கு வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அங்கு உறுதியளித்தார். அத்துடன் உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அமைச்சர் வழங்கினார்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜீவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# புதிய முதியோர் இல்லம் கிளிநொச்சியில் உதயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகரப் பகுதியில் புலம்பெயர் கொடையாளர் ஒருவரினால் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 50 அறைகளைக் கொண்ட எஸ்.கே.முதியோர் இல்லம் இன்று காலை 10.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கலை, கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க, சமூக சேவை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா உட்பட கிளிநொச்சி தேச செயலர்கள், சமூக நல விரும்பிகள் கலந்துகொள்ள ளனர்.

மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளால் இடை நடுவில் கைவிடப்பட்ட முதியோர்கள் இவ்இல்லத்தில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளதாக இவ்இல்லத்தை நிறுவியவரும் பராமரிப்பாளருமான கமலநாதன் தெரிவித்தார். (77)

# 'சலங்கையின் நாதம்' திருமறைக் கலாமன்றத்தில்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கலைஞர்களான செல்வி சுகாஸ்னி ஸ்ரீகுமார், சௌமி ஸ்ரீகுமார் ஆகியோரின் 'சலங்கையின் நாதம்' நடன நிகழ்வு நாளை மாலை 4.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், யாழ். இந்திய துணைத்தூதரக துணைத்தூதுவர் வெ.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் அழகியற் கல்வி ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலைஞர் வேல். ஆனந்தன், யாழ். கல்வி வலய நடன பாட ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கைத்தொழில் பேட்டையில் தொழில்முயற்சி விண்ணப்பித்தவர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வழிகாட்டலில் தொழிற்படவிருக்கும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தமது தொழில் முயற்சியை நிறுவுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.


இதில் முக்கிய விடயங்கள் கலந்துரையாடவிருப்பதனால் விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு மாவட்ட காரியாலயம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 2421 உடன் தொடர்புகொள்ளவும்.

# "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" யாழில் நேற்று நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாசின் 72 ஆவது அகவையை முன்னிட்டு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'இலங்கைத் தமிழியல்' சில பதிவுகள் மற்றும் 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' எனும் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த நூல்களின் வெளியீட்டு விழா நேற்று மாலை 3.00 மணிக்கு



நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அகவை 72 ஐப் பூர்த்திசெய்த வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் பாரியாரை தமிழுக்கும் தமிழ்துறைக்கும் ஆற்றிய சேவைகளுக்கும், கல்விச் சமூகத்தினருக்கு கிடைத்த அழியா அறிவும், பணிவும் ஆற்றலும் கொண்ட வணக்கத்துக்குரிய தமிழ் புலவர் என்று பேராசிரியர் சிவலிங்கராஜா மற்றும் மகாஜனாக் கல்லூரி அதிபர் வேல்.சிவானந்தன் ஆகியோர் வாழ்த்துரை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் இரு நூல்களையும் பேராசிரியர் அ.சண்முகதாசிற்கு பிறந்தநாள் பரிசாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி, திருகோணமலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநிர்த்தானந்தா, சொல்லின் செல்வர் இரா. செல்வடிவேல், சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஆசிரியர் பாலசண்முகன், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சந்திரசேகர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

# திருட்டுப்போன மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 நபர்கள் நேற்று இளவாலை பகுதியில் வைத்துப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் நடத்திய திடீர் சோதனையின் போது குறித்த 5 பேரும் கைதுசெய்யப்பட்டதுடன், 7 மோட்டார் சைக்கிள்களும் அவர்களிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மோட்டார் சைக்கிள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களை பார்வையிட்டு தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்தனர். (எஸ்)

# சட்டவிரோத இறைச்சி சிக்கியது கோப்பாய் பொலிஸார் அதிரடி

(திருநெல்வேலி)

அனுமதி பெறப்படாமல் வெட்டப்பட்ட மாடு ஒன்றின் இறைச்சி விற்பனைக்காக கொண்டு செல்லப்படவிருந்த சமயம் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதுடன், மாட்டிறைச்சியும் அழிக்கப்பட்டது.

கோப்பாய் தெற்கு கோண்டாவில் வீதியில் புதுவருட தினத்தன்று காலை 7.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

குறிப்பிட்ட வீடு ஒன்றில் மாடு வெட்டப்படுவதாக பொதுமக்கள் சிலரினால் கோப்பாய் பொது சுகாதாரப் பரிசோதகருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனை அவர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் மாட்டிறைச்சியையும் அதனுடன் தொடர்புடைய ஒருவரையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச்சென்றனர்.

அவர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வெட்டப்பட்ட மாட்டின் பெறுமதி சுமார் 10 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. கோப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பயிலுனர் பரிசோதகர்கள் ஆகியோர் கோப்பாய் பொலிஸாருடன் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டனர். (137)




ஸ்ரீ ராம ஜெயம்

சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.

கோடி வரத்தை எனக்கு கொடுத்தது கிருஷ்ணபரமாத்மாவே!

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாட்டம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதிவிஷேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறை நிறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்தால் மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், துர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.

23, மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615

நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.

(C/1185)



சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)




வடமாகாண சபையின் புதிய நிதியாண்டுக்கான பாதீட்டில் (பட்ஜெட்) வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கையொப்பமிடுவதைக் காணலாம்.

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

- செனாக்கா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பேசுவது வீரம்; பேணுவது சுயலாபம்

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகத் தங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறவர்கள் மட்டுமல்ல, நம் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களாகத் தங்களை முன்னிறுத்துபவர்களும் கூட இரட்டை முகங்களுடன் உலவி வருவதைக் காண்கிறோம். இவர்களது நடைமுறைகளுக்கும், வெளிவிடும் அரசியல் ஆவேச அறிக்கைகளுக்கும் இடையே உள்ள தூரம் மிகுந்த மலைப்புத் தருவது.

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியே சந்தித்து ஜனாதிபதியுடன், அமைச்சர்களுடன் என்ன பேசுகிறார்கள், எது எதற்கெல்லாம் சிரித்துக் குழைந்து நெளிகிறார்கள் என்பதைச் செய்திகளாகவும் காட்சிகளாகவும் கண்டு கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழ் மக்கள் கேட்பதற்காக அவர்கள் பேசும் வீர முழக்கங்களில் அனல் தெறிக்கிறது. நரம்புகள் முறுக்கேற்றப்பட்ட நிலையில், இவர்கள் ஏற்றிவரும் புதிய துன்பங்களையும் ஏற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் மக்கள்.

எண்பதுகளின் நடுப்பகுதியில், தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கான ஆதரவுக் கூட்டங்கள் பல பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அது. பாரதிராஜாவின் மண்வாசனை படத்தில் அறிமுகமான பாண்டியன் என்றொரு நடிகர் இருந்தாரல்லவா? (இப்போது அவர் உயிருடன் இல்லை; ஆத்மா சாந்தியடையட்டும்) இப்படித்தான் யாரோ உணர்ச்சிகரமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டுப் பாய்ந்து மேடையேறிய அவர், "அண்ணே, எனக்கொரு வாளைக் குடு. அவங்க எல்லாரையும் போய் வெட்டீட்டு வந்துடுறேன்..." என்று பேச்சாளரின் மைக்கைப் பிடுங்கிச் சொல்லிவிட்டுத் துடித்தபடி நின்றார். பேச்சாளர் முகம் பூரிக்க, "தம்பி நீதாண்டா தமிழன்" என்று கட்டிப் பிடித்தார்.

பேசி உணர்ச்சியூட்டுபவர்கள், தமிழன் என்பவன் எவ்வளவு முட்டாளாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் காட்டிய பல சம்பவங்களில் ஒன்று அது. அங்கு வைகோ சீமான் வகையறாக்கள் இன்றும் அதைத் தொடர்ந்து வருகிறார்கள். இங்கும் இவ்வளவு அனுபவங்களுக்குப் பிறகும் கூட அதே பாணி வசனங்களால் யதார்த்த நிலைமைகளை மூடிமறைத்து வெறும் உணர்ச்சியேற்றிக் கொண்டிருக்க முயல்கிறார்கள், அது முடியவும் செய்கிறது என்பது கவலைப்பட வேண்டிய ஒன்றுதான்.

பாராளுமன்றப் பேச்சில் வராததையும் தங்கள் பேச்சாக ஹன்சார்ட்டில் பதிவு செய்வித்துக் கொள்ளும் அலுவலுக்குக் கூட எவரிடமும் போய்க் குழையத் தயங்காத இவர்கள், மக்களுக்கு மட்டும் எதற்குச் சவால் அரசியல் காட்டுகிறார்கள்?

கொழும்பில் மட்டும் இல்லை இந்த இரட்டை வேடம்; குடாநாட்டிலும் அதே வேடந்தாங்கல்தான். படையினரின் பிரசன்னத்தை எதிர்த்து வீர அறிக்கைகள் விட்டுக்கொண்டே இங்கு படைத்தரப்பினர் நடத்தும் நிகழ்ச்சிகள் விழாக்களிலும் முன்வரிசையில் போய் அமர்ந்து கொள்கிறார்கள். அரசியல்வாதிகள் மட்டுமல்ல மதிப்புக்குரிய சிவில் சமூகப் பிரஜைகளும் இந்த 'இரட்டை வேட' நடிப்புக்கு வெட்கப்படாதவர்களாக இருக்கிறார்கள்.

படையினரை வெளியேற்றுவதற்கு ஆவேச அறிக்கைகளும் வெளிநாடுகளுக்கு விண்ணப்பங்களும் செய்து கொண்டிருப்பவர்கள், படையினர் விழாக்களில் கலந்துகொண்டு அவர்களின் இருப்பை அங்கீகரிப்பது முரண்பாடில்லையா? போர் முடிந்து மூன்று வருடங்களும் ஆகாத நிலையில் படையினர் முற்றாக வெளியேறுவது சாத்தியமில்லை என்பதை உணர்ந்துதான் இவர்கள் இத்தகைய அங்கீகரிப்புடன் நடந்து கொள்கிறார்கள் என்றால் அதைத்தானே வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். எதற்காக வெளியேறச் சொல்லும் வீர வசனங்களைப் பேசி எல்லோரையும் ஏமாற்ற வேண்டும்?

அப்படியில்லை, வெளியேற்றுவதுதான் உங்கள் கொள்கை அதில் நீங்கள் உறுதியுடனிருக்கிறீர்கள் என்றால், இவ்வாறு விழாக்களுக்கு அழைப்பு வரும்போது நீங்கள் சொல்ல வேண்டியதென்ன? "உங்கள் விழாக்களில் கலந்துகொண்டு நீங்கள் இங்கே இருப்பதை நியாயப்படுத்த விரும்பவில்லை, மன்னித்துவிடுங்கள்" என்று தயவாய்க் கூட நிராகரித்து விடலாமே?

உங்கள் கொள்கைகளுக்காக நம்பிக்கைகளுக்காகப் போராடும் நேர்மையற்ற நீங்கள் எதற்காக மக்களுக்கு வருத்தச் சுமைகளை ஏற்படுத்தும் வார்த்தைகளைச் சும்மா பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? யதார்த்தத்தை மறைத்து எதற்கிந்தப் போலிநாடகம்?

– ஆசிரியர்

# 145 இலட்சம் கண்ணிவெடிகள் வடபகுதியில் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடக்கில் 145 இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த 44 இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் இதுவரை அகற்றப்பட்டுள்ள அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த 101 இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற 2011 ஆம் ஆண்டுக்கான இறுதி அபிவிருத்தி மற்றும் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, வடமாகாண ஆளுநர் இந்த விடயத்தை வெளியிட்டார்..

தொடர்ந்து ஆளுநர் தனது உரையில் தெரிவிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 ஆயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 442 பேர் மீள்குடி யேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு காரணங்கள் மற்றும் கண்ணிவெடியகற்றப்படாமல் இருக்கும் பிரதேசங்களில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு பிரிவு பிரதானிகளுடனான கலந்துரையாடல்களின் பின்னர் மீள்குடியேற்றம் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பம்பலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரியின் நேரத்தை நீடிக்கும் தீர்மானத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை நேரத்தை பிற்பகல் 3.00 மணி வரை நீடிக்கும் தீர்மானத்திற்கு எதிராகப் பெற்றோர்களும், மாணவர்களும், அரசியல்வாதிகள் சிலருடன் இணைந்து ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதுவரை பிற்பகல் 1.30 மணிவரை பாடசாலை இயங்கியது. இனிமேல் இதை பிற்பகல் 3.00 மணிவரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமது கட்சியும் பங்குபற்றவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேரத்தை நீடிக்கும் மேற்படி தீர்மானம் குறித்து பெற்றோர்கள் சிலர் தமக்கு அறிவித்ததாகவும், இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் குமரகுருபரன் தெரிவித்துள்ளார். இத்தீர்மானம் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை.

இவ்விடயம் குறித்து கல்வி அமைச்சு செயலாளருடன் தொடர்புகொண்ட போது இவ்வாறான தீர்மானத்தை கல்வி அமைச்சு மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தால் இத்தீர்மானத்தை மாற்றுவதற்கு கோருவதற்கு தான் தயார் எனவும் அமைச்சின் செயலாளர் கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மனைவியை தாக்கியவருக்கு புத்தாண்டுப் பரிசாக வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மனைவியைத் தாக்கிய கணவனுக்கு மைத்துனர் சரமாரியான வாள்வெட்டினைப் புதுவருடத்தில் பரிசாகக் கொடுத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நாவற்குழியைச் சேர்ந்த வி.அற்புதராசா (வயது 27) என்ற குடும்பஸ்தரே கை, கால் முதலியவற்றில் வாள் வெட்டிற்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிசிச்சை பெற்று வருகின்றார்.

இவரை வாளால் வெட்டிய மைத்துனர் சாவகச்சேரிப் பொலிஸில் சரணடைந்துள்ளார். இச்சம்பவம் குறித்து சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பொலிஸில் சரணடைந்த மைத்துனர் தான் பயன்படுத்திய வாளுக்குப் பதிலாக கிறிஸ் கத்தி ஒன்றையே பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார். (பா)

# மாமுனை - கட்டைக்காடு வீதி மழையினால் பாரிய சேதம்

(வடமராட்சி கிழக்கு)

அண்மையில் தொடர்ந்து பெய்த கடும் மழை கடல்நீர்ப் பெருக்கு காரணமாக மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான வீதிப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் முற்றாகப் பழுதடைந்துள்ளது.

வீதி பழுதடைந்த காரணத்தினாலும், வீதியில் நீர் தேங்கி நிற்கும் காரணத்தினாலும் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பயணிகள் பேருந்துகள் ஆளியவளை, வெற்றிலைக்கேணி வரையுமே இடம்பெறுகின்றன.

இதனால் வடமராட்சி கிழக்கில் கிழக் கெல்லைக் கிராம மக்கள் கால் நடையாகவே பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

இப்பாதையில் சேவையில் ஈடுபடும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை இ.போ.ச சாலை பஸ் வண்டிகள் அடிக்கடி பழுதடைந்து வீதியில் நிறுத்தப்படுவதால் மக்கள் தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே மாமுனை - கட்டைக்காடு வரையான கடற்கரை வீதி போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் திருத்தப்படுவதுடன், யாழ்ப்பாணம், பருத்தித்துறையிலிருந்து - கட்டைக்காடு, கேவில் வரையான பாதையில் நல்ல நிலையிலுள்ள பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# பாசையூர் இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் இறங்குதுறை புனரமைப்புப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் இறங்குதுறைப் பகுதி ஏற்கனவே "யூனெப்ஸ்" நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக குறித்த இறங்குதுறைப் பகுதியில் கற்கள் இடப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இருந்தும் நிதிப் பிரச்சினை (நிதிபோதாமை) காரணமாக குறித்த நிறுவனத்தினால் குறித்த பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

இதன் காரணமாக பாசையூர் மீனவர்கள் தமது கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் குறித்த இறங்குதுறையைப் புனரமைக்கும் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு யாழ. மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான பணிகளை முன்னெடுக்கப் பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் திணைக்களம் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது. இறுதியாக ஐ.ஒ.எம். நிறுவனம் இப்பணிகளை முன்னெடுக்க கொள்கையளவில் இணங்கியிருப்பதாகவும், அதற்கான மதிப்பட்டு விபரக்கோவையை தமக்குச் சமர்ப்பிக்கும் படியும் கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

# இடவசதியின்றி இயங்கிவரும் கிளிநொச்சி பால் சேவை நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மாவட்டத்திற்கான பால் சேவை அலுவலகம் உரிய இடமில்லாது பின்தங்கிய பிரதேசத்தில் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இவ் அலுவலகம் கிளிநொச்சி நகரப் பகுதியில் இயங்கி வந்தது. தற்போது அறிவியல் நகரில் உள்ள கிராமப் புறப் பகுதியில் போக்குவரத்து வசதிகள் இன்றிய நிலையில் பாதுகாப்பற்ற இடத்தில் இயங்கி வருகிறது.

இப்பால் சேவை அலுவலகம் கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, பூநகரி, முல்லைத்தீவு உள்ளிட்ட பல பிரதேசங் களில் மாடு வளர்ப்போரிட மிருந்து பாலை கொள்வனவு செய்து விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த இடத்தில் இவ் அலுவலகம் அமைந்துள்ளதால் தற்போது முன்பள்ளி ஆசிரியர்களே மாணவர்களின் தேவைகளுக்காக பாலைக் கொள்வனவு செய்து வருகின்றனர். பொதுமக்கள் குறைவாகவே இங்கு வந்து கொள்வனவு செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கிய அலுவலகமாகக் காணபடும் இப்பால் சேவை அலுவலகத்தைப் புதிதாக அமைத்து தருவதற்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ள போதிலும் இதற்கான உரிய இடம் இல்லாது வாய்ப்புக்கள் கைநழுவிப் போவதாக பால் சேவை அலுவலகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய இடத்தைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (77)

## வவுனியாவில் நடைபெற்ற முன்பிள்ளைப் பருவ வார நிகழ்வு

(வவுனியா)

சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தின் அனுசரணையில் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் முன்பிள்ளைப் பருவ வார நிகழ்வு வைரவ புளியங்குளத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர்களின் பிரச்சினைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன சிறுவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்ப குறித்தும விளக்கங்கள் அ[illegible]கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருஞானசம்பந்தனர், சிறுவர்களுடன் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (125)

# இனவேற்றுமையை தவிர்ப்பதற்கு மதத்தலைவர்கள் வழிகாட்டவேண்டும்

## கரவெட்டி பிரதேச செயலர்

(கரவெட்டி)

இன்றைய கால கட்டத்தில் மதங்களின் பண்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்ற நான்கு மதத் தலைவர்களும் சரியான பாதையில் பயணித்து சுபீட்சமான வாழ்வை அடைய முடியும் என கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கம் நடத்திய ஒளிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்பு என்பது கிறிஸ்தவ மதத்தவர்களிடையே ஓர் அங்கமாக கொள்ளப்படுகின்றது. அதாவது, எல்லோரையும் நல்லவர்களாக ஏற்று சகோதரவாண்மை உள்ளவர்களாக மதிக்கவேண்டும். அதனூடாகத்தான் எம்மை ஓர் உயர் சமூகமாக மாற்றமுடியும் என யேசுபிரான் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை எமில் போல், கட்ரைவேலி போதகர் அருட்திரு எஸ் டபிள்யூ தேவகுமார், உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபை போதகர் அருட்திரு எம்.பி. ஜெயநேசன் கலந்து சிறப்பித்ததுடன் உதவி பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொணடனர். (116)

## நோயாளர்களின் பயன்பாட்டிற்கு வராத வைத்தியசாலையின் 2 மாடிக்கட்டடம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் பயன்பாட்டுக்காக இது வரை திறக்கப்படாது இருப்பதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது வரை பயன்பாட்டுக்கு விடாதிருப்பதால் இடநெருக்கடி காணப்படுவதாகவும் விரைவில் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு இக்கட்டடத்தை பயன்பாட்டுக்கு விடுமாறும் நோயாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, இவ்வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை போன்ற நோயாளர்களுக்கான கிளினிக் சேவை மற்றும் கர்ப்பிணிகளுக்கான கிளினிக் சேவைகளும் இங்கு இடம் பெறாததால் கிளிநொச்சி, பூநகரி, வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி பிரதேசத்திலிருந்து வரும் நோயாளர்கள் தாம் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாதத்தில் ஒரு நாளாவது மேற்படி வைத்திய சேவைகளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கிடைக்கச் செய்தால் பொதுமக்களின் நேர விரயம் குறைவடையும் எனவும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்படும் நெருக்கடி நிலையும் குறைக்கப்படும் எனவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். (11)

# இரத்த வங்கிக்கு செல்வதில் சிரமம் தீர்வு காணுமாறு ஊழியர்கள் கோரிக்கை



இரத்த மாற்றீடு செய்வதற்காக ஊழியர்கள் பயன்படுத்தும் பாதை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த மாற்றீடு செய்வதற்கான தகுந்த இடவசதி இல்லை என யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

இரத்த வங்கிக்கு செல்வதற்கான பாதை சீரற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றது. அத்துடன் மழைக் காலங்களில் மழையில் நனைந்து கொண்டு கடமை செய்வதாகவும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் கண் சத்திர சிகிச்சை விடுதியின் கழிவறை அமைந்துள்ளதால் கழிவறையின் துர்நாற்றம் வீசுவதுடன் மின் விளக்குகள் இன்றிய நிலையில் இருளில் இரத்த வங்கிக்குச் செல்வ வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும் குறித்த பகுதியில் இரவு வேளைகளில் பெண் சிற்றூழியர்கள் இரத்த வங்கிக்குச் செல்வதற்கு பாதுகாப்பான பகுதியாக இல்லை. இவ்வாறு பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் இரத்த வங்கிக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் தாம் கடமையாற்றுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரத்த வங்கிப் பகுதி சுகாதார சீர்கேடான முறையில் காணப்படுவதுடன் நுளம்பு பெருகுவதற்கான அறிகுறிகளும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இரத்த வங்கிக்குச் செல்வதற்கான பாதையை பாதுகாப்பானதாக அமைத்துத் தருமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் சிற்றூழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, இவ்வைத்தியசாலையில் நவீன மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதால் இவ்வாறு வசதியீனங்கள் பொதுவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

# யாழ்ப்பாண மாநகர சபையில் சிறப்பாக நடைபெற்ற ஒளிவிழா





(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் ஒளி விழா நிகழ்வு கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ் மாநகர சபை வளாகத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறைவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து ஆசியுரைகள் சர்வ மதத் தலைவர்களால் ஆற்றப்பட்டது.

வரவேற்பு நடனம் திருமறைக் கலாமன்ற கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டது. வரவேற்புரை திருமதி றியோல்ட் மதுரா ஆற்ற, தலைமையுரை மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவால் ஆற்றப்பட்டது நத்தார் கீதத்தை தொடர்ந்து வாழ்த்துரை மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ அவர்களால் நிகழ்த்தப் பட்டது. நடனம்,சிறப்பு விருந்தினர் உரையைத் தொடர்ந்து நத்தார் கீதம், பேச்சு, நடனம் என்பன இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினர் உரை மேஜர் ஜனரல் ஜீ.ஏ.சந திர சிறி அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை டக்ளஸ் தேவானந்தா அவர்களால ஆற்றப்பட்டது.

யாழ் மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் 50 பேருக்கு இலவசமாக 50 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது. நன்றியுரையைத் தொடர்ந்து விருந்துபசாரம் இடம்பெற்றது.

தொடர்ந்து மாநகராட்சி மன்ற இசைக்குழுவினர் வழங்கிய இசை விருந்து இடம் பெற்றது.

# இடமாற்ற ஆசிரியர்களின் பட்டியல் காட்சிக்கு

(பருத்தித்துறை)

வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் சகல ஆசிரியர்களின் பெயர் பட்டியல்கள் அவ்வவ் வலயக் கல்வி அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பட்டியல்களில் உள்ள ஆசிரியர்கள் தமது மேன்முறையீடுகளை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேன்முறையீட்டு இடமாற்ற சபைக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு அவ்வவ் வலயக் கல்வி அலுவலகங்களில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# இரணைமடுவில் முழுமையாக மீன்பிடிக்க விரைவில் அனுமதி பெற்றுத்தரப்படும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார்



(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்தில் தற்போது மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி அக்குளத்தில் முழுமையான பகுதியிலும் மீன்பிடியினை மேற்கொள்வதற்கான அனுமதியினை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சாந்தபுரம் பகுதியில் மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் முற்றாக மீன்பிடிக்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்த இரணைமடுக் குளத்தில் குறித்த சில பகுதிகளில் மீன்பிடியினை மேற்கொள்வதற்கான அனுமதியினை நாம் இவ் ஆண்டின் ஆரம்பத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி பெற்றுத் தந்திருந்தோம். அதனைத் தொடர்ந்து அங்கு மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மக்களின் வாழ்வாதாரம் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை எட்டியுள்ளது.

இந்நிலையில் குளத்தின் முழுமையான பகுதியிலும் மீன்பிடியினை மேற்கொள்வதற்கான அனுமதி தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போதும் எம்மால் வலியுறுத்தப்பட்டது. எனவே விரைவில் அதற்கான அனுமதியினை பெற்றுத் தருவதற்கான செயற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். என தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையத்தின் நிதியுதவியில் சேவா லங்கா நிறுவனத்தினால் 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான 32 வள்ளங்கள் இரணைமடு நன்நீர் மீன்பிடிச் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட நீரியல்வள விரிவாக்க அலுவலர் சலீபன், டிமரியன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையத்தின் நிதிவழங்குனர் றோலன்ட் கென்றிசன், சேவா லங்கா நிறுவனத்தின் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் யோகராஜா ஆகியோரும் நன்நீர் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரி சந்தைப்பகுதிகளில் வாகனங்களை நிறுத்த தடைவிதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினால் சபைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக பதிய சந்தைப்பகுதி பஸ் நிலையம் ஆகியவற்றுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பகுதிகளில் துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள், மற்றும் வாகனங்கள் என்பன நிறுத்தப்பட்டதால் நெருக்கடி நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இவற்றை நிறுத்துவதற்கு நேற்று முதல் சபை தடைவிதித்துள்ளது.

இப்பகுதிகளில் வாகன நெருக்கடிகள் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகர சபை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். இதேவேளை இது வரை சந்தைக்கான வரி வசூலிப்பு தனியாரிடம் வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முதல் நகரசபை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரி நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# உத்தியோகத்தர்களின் சத்தியப்பிரமாணம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் உத்தியொகத்தர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிப்பாளர் தேசியக் கொடியை ஏற்றியவைத்தார்.

தொடர்ந்து சகல உத்தியோகத்தர்களும் ஜனநாயக குடியரசின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தமது கடமைகளை செவ்வனே ஆற்றுவோம் என உறுதி மொழி செய்தனர். (109)

# பணத்தை பெறவும்

(கிளிநொச்சி)

முருகண்டி பிள்ளையார் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை தவறவிடப்பட்ட சிறு தொகைப்பணம் ஆலய நிர்வாகத்தினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.உரியவர் பணத் தொகையைக் குறிப்பிட்டு பெற்றுக் கொள்ளலாம் என குறித்த ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (77)

## - யாழ்.மாவட்டத்தில் -

# துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கென பராமரிப்பு கிராமம் ஒன்று உருவாக்கப்படும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு மன்னிப்பு வழங்காமல் வாழ்நாள் பூராகவும் சிறையில் இருக்கக் கூடிய சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டும் என அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

யுவர் பிரண்ட் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,' சிறுவர்களை பாதுகாக்க நடைமுறையில் உள்ள சட்டங்களை மீளவும் இறுக்கமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இதற்காக அண்மையில் வரவு செலவுத்திட்ட பிரேரணையின் போது ஒரு பிரேரணையை நான் முனவைத்தேன். மேலும் துஷ்பிரயோகம் யாழில் அதிகரித்துள்ளமையினால் இது தொடர்பில் வழிப்புணர்வு நிகழ்வுகளை பல அமைப்புகளுடன் இணைந்து மேற்கொண்டு வருகிறேன். பல பிரச்சினைகள் எமக்கு உள்ளன. ஆனால்அவற்றை தீர்க்க பல காலங்கள் எடுக்கும்.

இச்சிக்கல்களை தீர்ப்பதற்கு யாழில் தமிழ் பேசும் உதவி பொலிஸ் மா அதிபர் உட்பட 26 மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.துஷ்பிரயோகத்தில் பாதிக்கப்படும் அநாதவாக நிர்க்கதிக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கென சிறுவர் பராமரிப்பு கிராமம் உருவாக்கப்படும். இது செவிலித்தாய் ஒருவர்மூலம் பராமரிக்கப்படும் இது கிட்டத்தட்ட 15,20 வீடுகள் கொண்டதாக இருக்கும் இத்திட்டத்துக்கு சிறுவர் மகளிர் அமைச்சின் மேற்பார்வையில் வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறுவர் இல்லங்கள் படிப்படியாக முடப்படும் என்றார்.

இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் யுவர்பிரண்ட் பவுண்டேஷன் ஸ்தாபகர் செவ்வேள், அமைப்பின் பணிப்பாளர் சுபாசினி, உளசமூக வள உத்தியோகத்தர் கௌதமன் உட்பட ஊடகவியலாளர் பலரும் கலந்து கொண்டனர். (எப்,எஸ்)

# க.பொ.த.(உ/த)பரீட்சை பெறுபேறில் வவு.தமிழ்மகாவித்தியாலயம் சாதனை

(வவுனியா)

வெளியாகியுள்ள கா.பொ.த.( உயர்தர) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சிறந்த பெறுபேறுகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்று சாதனைபடைத்துள்ளது.

பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய கற்கை நெறிகளில் 'சுப்பர் மெரிட்' (அதிவிசேட திறமை) சித்தி பெற்று கல்லூரிக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக வித்தியாலயத்தின் அதிபர் எம். எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பௌதீக விஞ்ஞானப்பிரிவில் சிவகுமாரன் கௌதமனும், உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் கலியுகவரதன் லபோசனும், வர்த்தகப்பிரிவில் கிருஸானந்தராசா கஜந்தனும் மூன்று பாடங்கிலும் 'ஏ' சித்திகளை பெற்றுள்ளதுடன் அதி விசேட சித்திகளையும் பெற்றுள்ளனர். அத்துடன் வர்த்தகப்பிரிவில் சிவகுமார் மாசிலன், கருணாநிதி பிரசாந்தன் ஆகியோர் மூன்று பாடங்களில்'ஏ' சித்தி பெற்று அதி விசேட சித்தி பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞானப்பிரிவில் பரந்தாமன் ரஜீவ்கரன் 3ஏ, கைலைநாதன் கரிகரன் 2ஏ,பி, இளந்தளையசிங்கம் சுவேதன் 2ஏ, பி, ஆகியோர் 'மெரிட்' ( திறமை) சித்திகளையும் சுப்பிரமணிய சர்மா மணிவண்ணன் 2ஏ, பி, யோசப் அறிவழகன் 2ஏ, பி, பாஸ்கரன் கோகுல்ராஜ் 2ஏ, சி, யேசுராஜ் புவிராஜ் 3பி, பாலசாமி சுந்தரேஸ்வரன் ஏ, 2சி, பெறுபேறுகளையும் பெற்று பொறியியல் பீடத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் யோகநாதன் ஜனகன் 2ஏ, பி, துரைசிங்கம் பவநீதன் 2ஏ, பி, செல்வி நிதர்சினி பாலசிங்கம் ஏ, 2பி, பெறுபேறுகளையும் பெற்று மருத்துவ பீடத்திற்கும் தகுதி பெற்றுள்ளனர். எனத் தெரிவித்தார். (125)

# பொருட்கள் அகற்றல்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் நிலையக்கட்டடத்திற்கு முன்னால் விற்பனைக்காக வைக்கப்பட்ட பொருட்கள் அகற்றப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் தமது கட்டடத்திற்குள்ளே வியாபார நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இவற்றை மீறி விற்பனைக்காக வைக்கப்பட்ட பொருட்கள் மானிப்பாய் பிரதேச சபையினரால், பொலிஸாரின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)




சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொது நூலக தேசிய வாசிப்பு மாத பரிசில்வழங்கும் நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் லலீசன் பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (11)



# கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியலூடாக நிரந்தர தீர்வினைப் பெற்றுவிட முடியாது

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளின் அரசாங்கங்களினதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களினதும் ஆதரவு தமக்கு இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியல் ஊடாக ஒருபோதும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினை இவர்களால் பெற்றுவிட முடியாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச இணைப்பாளர் எம். மித்திரன் தெரிவித்துள்ளார்.

புலம் பெயர்ந்து சர்வதேச நாடுகளில் வாழும் தமிழ் மக்களுடைய தற்போதைய நிலை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதைப் போன்று புலம்பெயர் நாடுகளில் இவர்களுக்கு ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. வன்னியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பெயரால் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் நிதி சேகரித்து வருகின்றனர். ஆனால் இந்த நிதி தமிழ் மக்களைச் சென்றடையவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் இருந்து வந்த ஆதரவு குறைந்துவருகிறது. சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான நிரந்தர அரசியல் தீர்வினைப் பெற்றுத் தருவதாக இவர்கள் கூறுவதில் எந்த ஒரு உண்மையும் கிடையாது. இவர்களால் இது முடியாது. இவர்கள் பின்பற்றிவரும் எதிர்ப்பு அரசியல் ஊடாக இதனைச் சாதித்துவிட முடியாது. நிரந்தரத் தீர்வு தொடர்பாக சர்வதேச நாடுகளிடம் கையேந்துவதை விடுத்து நடைமுறைச் சாத்தியமான வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் பேசி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். ஆனால் இதனைச் செய்யாது எதிர்ப்பு அரசியல் ஊடாக இரட்டை வேடத்துடன் சர்வதேச ஆதரவு இருப்பதாகக் கூறி தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றனர்.

தமிழ் மக்களின் அழிவுக்கும் முள்ளிவாய்க்கால் அவலத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே காரணமானவர்கள். இனிவரும் காலங்களாவது நடைமுறைச் சாத்தியமான வகையில் சிந்தித்துச் செயற்பட இவர்கள் முன்வர வேண்டும். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் இந்தப் பகுதி மக்களுடன் இருந்து மக்களுடைய நலன்கள் தொடர்பாகவும் பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் தூர நோக்குடன் செயற்பட்டமையினாலேயே இந்தப் பகுதி தற்பொழுது வேகமான அபிவிருத்தியை கண்டுவருகிறது. இந்த ஜனநாயக வெற்றியை கடந்த கால தேர்தலிலும் மக்கள் நிருபித்துள்ளனர்.

எனவே கூட்டமைப்பினர் தொடர்ந்தும் சர்வதேசத்தினைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றாது மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் நடைமுறைச் சாத்தியமான வகையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றார்.

# திருட்டுக்களை இல்லாதொழிக்க வர்த்தகர்களின் ஒத்துழைப்பு அவசியம்

## பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர்

(வடமராட்சி)

வர்த்தக சங்கம் என்பது நெருக்கடிகள் வரும்போது தேவைப்படும் பட்சத்தில் இயங்குவதோ அல்லது தேவைப்படுவதோ அல்ல. மாறாக வர்த்தகர்களினால ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படுவதே வர்த்தக சங்கம். அப்போதுதான் வர்த்தக சங்கம் சீரான செயற்பாட்டுடன் நிலையான ஓர் வர்த்தக சங்கமாக இருக்க முடியும் என பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் சி. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் நான்கு கடைகளில் கொள்ளையிடப்பட்டுள்ளன. எமது வர்த்தக சங்கத்தினால் இதற்கான நஷ்டஈட்டை வழங்க முடியாது. காப்புறுதி செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே அந்தக் காப்புறுதி நிறுவனத்தினூடாக நஷ்டஈட்டைப் பெறமுடியும். எமது வர்த்தக சங்கத்தினால் இவர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதாயின் வர்த்தகர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

எமது சங்கம் 146 பிரதான வர்த்தக நிலையங்களைக் கொண்டுள்ளது. வர்த்தக நிலையத்தின் பாதுகாப்பு சேவைக்காக நாம் மாதாந்தம் சிறிய கடைக்கு 300 ரூபாவும், பெரிய கடைகளுக்கு 1500 ரூபாவும் பெற்று பொலிஸ் அதிகாரிகளின் பணிப்புடனும் அனுமதியுடனும் ஐந்து பாதுகாப்பு ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தினோம்.

இறுதியில் வர்த்தகர்களின் ஒத்துழைப்பின்மையால் 29 வர்த்தகர்களின் உதவியுடன் 2 பாதுகாப்பு ஊழியர்களை சேவையில் ஈடுபத்தி இருந்தோம். இவர்களும் தற்போது சேவையாற்ற மறுத்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (116)

# நீர்கொழும்பில் அதிகரித்துள்ள உல்லாசப் பயணிகள் வருகை

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரம் உல்லாசப் பயணத்துறைக்கு பெயர் பெற்றது. தற்போது நகரின் பல இடங்களிலும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நிரம்பி வழிகின்றனர்.



ஹோட்டல் தொழிற் துறையினரும், உல்லாசப் பயண தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினரும் அதிகரித்திருக்கும் உல்லாசப் பயணிகளின் வருகையால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கையில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. அண்மையில் இந்த வருடத்தின் எட்டாவது இலட்சம் வெளிநாட்டு உல்லாசப் பயணியும் இலங்கையை வந்தடைந்தார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவருக்கு பெரும் வரவேற்களிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மட்டு கல்வியியல் கல்லூரியில் வெள்ளியன்று மாணவர்கள் பதிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாழங்குடாவிலுள்ள தேசிய கல்விக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான புதிய ஆசிரிய பயிலுநர் மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுமென மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எம்.பாக்கியராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் இவ்வாண்டு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள ஆசிரிய பயிலுநர் மாணவர்களுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் புதிய மாணவர்கள் பதிவு செய்த பின்னர் அன்றையதினமே கல்லூரியில் தங்கியிருத்தல் வேண்டும். இதற்கான ஆயத்தங்களுடன் புதிய ஆசிரிய பயிலுநர் மாணவர்களை வருகை தருமாறும் பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் வருடாந்த திருவாசக விழா எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பேராசிரியர் அ. சண்முகதாசின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

# வான் பாய்ந்து அடித்துச் சென்ற 300 மில்லியன் ரூபா அபிவிருத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் 300 மில்லியன் ரூபா அபிவிருத்தி முதல் நாள் வான் பாய்ந்ததோடு முடிவுக்கு வந்துள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் அபிவிருத்திப்பணிகள் யப்பான் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 300 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் அணைக்கட்டு வான்கட்டு என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தது.

அண்மையில் பெய்த கன மழை காரணமாக குளம் நிரம்பி வான் பாயத்தொடங்கிய முதல் நாளே வான் கட்டுப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து



அணைக்கட்டுகளும் உடைக்கப்பட்டதோடு வேகமாக பாய்ந்த நீரினால் முறிகண்டி முழங்காவில் வீதியும் ஊடறுத்து பாய்ந்து வீதிப் போக்குவரத்தையும் முற்றாக தடை செய்திருந்தது.

இது தவிர வான் பகுதியில் பரவப்பட்ட மண் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு வயல் நிலங்களுக்கு சென்றுள்ளமையால் பெருமளவு வயல் நிலங்களும் மண் மேடுகளாகக் காணப்படுவதாகப் பிரதேச விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இடத்திற்கு துறைசார் அதிகாரிகளுடன் விஜயம் மேற்கொண்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததோடு மீள் புனரமைப்புக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்

இதேவேளை, இவ்வருடம் ஒக்ரேபர் மாதத்திற்குள் மீள் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்து தருவதாக குறித்த நிறுவனத்தினரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (29)

## பரிசு வழங்கல்

(ஆனைக்கோட்டை)

இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையினால் 18 பிளஸ் கணக்கு வைத்திருந்த 5 பேருக்கு திருமணப் பரிசாக ஒரு பவுண் நிறையுடைய மோதிரம் பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மானிப்பாய்க் கிளை முகாமையாளர் இ. சகாதேவன் இவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார். இதில் வங்கி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (104)

## பின்னால் திரும்பிப்பார்ப்பதன் முக்கியத்துவம்....

இருந்தும் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் தேசிய அரசுத்தன்மை மற்றும் ஜனநாயக நிர்வாக முறையை திறமையாக முன்னெடுப்பதற்கு தேவையான இலங்கையர் இனம் மற்றும் ஜனநாயக சமூகத்தை ஏற்படுத்தவும் தவறிவிட்டது.

இவற்றின் முக்கியத்துவம் குறித்து தமிழ், சிங்கள தலைவர்களுக்கு சரியான புந்துணர்வு இருக்கவில்லை. இனங்களுக் கிடையேயும் இனங்களுக்குள்ளும் குரோதங்கள் வளர்ந்து முடிவின்றி இரத்தம் சிந்தும் நிலை வடக்கில் மட்டும் உருவானதல்ல என்பதை தமிழ் மக்கள் புந்துகொள்ள வேண்டும். இதே நிலை தெற்கிலும் ஏற்பட்டது. சுதந்திரம் பெற்ற பின்னர் நிறைவேற்றப்படாத இரண்டு விடயங்களை இப்போதாவது நிறைவேற்றுவதன் மூலமே இந்த மோசமான நிலையை மாற்ற முடியும்.

இனங்களுக்கிடையேயும் இனங்களுக்குள்ளும் மோதல் ஏற்படக்கூடிய காரணங்களான பிரிவினை இருக்கின்றதென்பதை மறந்து விடக்கூடாது. சகலரும் சமமான உரிமைகளுடன் கௌரவமாக வாழும் இலங்கையை உருவாக்குவதற்காக இலங் கையர் என்ற இனம், ஜனநாயக சமூகம் ஆகிய விடயங்கள் இரண்டுக்கும் தேவையான பொருந்தக்கூடிய ஜனநாயக அரசியலமைப்பை ஏற்படுத்திக்கொள்வது எவ்வாறு என்பதே தற்போது இலங்கை முகம் கொடுக்கும் பாரிய சவால் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

# சென் யூட், இராணுவ அணிகள் வெற்றி

(முல்லைத்தீவு)

புத்தாண்டைச் சிறப்பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தின் ஏற்பாட்டில் கால்பந்து மற்றும் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகள் முல்லைத்தீவு நகர மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டிகளில் இராணுவ அணி, பொலிஸ் அணி, கரையோர இளைஞர் அணி, சென்யூட் அணிகள் பங்குபற்றின.

15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இராணுவ அணியுடன் சந்திரன் அணி மோதியது. இதில் இராணுவ அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றுமொரு போட்டியில் பொலிஸ் அணியுடன் சென்யூட் அணி மோதியது. இதில் சென்யூட் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் சென்யூட் அணியை இராணுவ அணி வெற்றிபெற்றது.

இதேவேளை அன்றைய தினம் மாலை 3 மணிக்கு நடந்த கால்பந்துப் போட்டியில் சென்யூட் அணியும், இராணுவ அணியும் மோதின. இதில் சென்யூட் அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் 591 படைப் பிரிவின் இராணுவ அதிகாரி பிரிகேடியர் அஹல மல்ப்பே கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (04)

# ஊர் சுற்றுப் போட்டி இன்று வேலணையில்

(யாழ்ப்பாணம்)

கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் ஊர் சுற்றுப் போட்டி இன்று காலை 7 மணிக்கு வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் யாழ். மாவட்ட அனைத்துப் பிரதேச செயலக வீர, வீராங்கனைகளையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக் கொள்ளும் வீர, வீராங்கனைகள் எதிர்வரும் ஏழாம் திகதி முல்லைத்தீவில் நடைபெறவுள்ள வடமாகாண மட்ட ஊர் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இப்போட்டியில் வெற்றியீட்டும் வீர, வீராங்கனைகளுக்குப் பரிசில்களும் வழங்கப்படும் எனவும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் தமது விளையாட்டு வீர, வீராங்கனைகளை வேலணை பிரதேச செயலகத்திற்கு உரிய நேரத்திற்கு அழைத்து வருமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (எஸ்)

# அக்கராயன் ம.வியில் மென்பந்து கிரிக்கெட்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி தொடர் ஒன்று எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் அக்கராயன் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அக்கராயன் ஞானோதயா விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் இப்போட்டி 10 ஓவர்களைக் கொண்டதாகும்.

பதிவு செய்யப்பட்ட அணிகள் மட்டுமே இப்போட்டிகளில் கலந்துகொள்ள முடியும் என்றும், போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகி யுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



சிட்னி மைதானத்தில் இன்று 100ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது. இதனை பெருமைப்படுத்தும் வகையில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையால் தொப்பி ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் அவுஸ்ரேலிய, இந்தியா அணிகள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள், மரதன் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை எம்.ஜி.ஆர் பேரவையினால் எம்.ஜி.ஆரின் 24ஆவது ஆண்டின் நினைவும் பொன் மதிமுகராசாவின் 13ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டும் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல் போட்டிகள் நடத்தப்பட்டது.

இதில் ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு

ஆண்களுக்கான 40 மைல் சைக்கிள் ஓட்டம் : முதலாமிடம் துரைராஜா றஜீம், இரண்டாமிடம் இராசையா இதயன், மூன்றாமிடம் அப்புசாந்தி சலட்சன், நான்காமிடம் பொன்னையா பாலரஜீவ், ஐந்தாமிடம் ஜே.எச்.எம். சாஜன்.

பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டம் : முதலாமிடம் இராமேஸ்வரன் ஜனனி, இரண்டாமிடம் குமாரராசா தனுஷா, மூன்றாமிடம் பத்மா.

25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டம் : முதலாமிடம் கிருஸ்ணன் ஜெயந்தன், இரண்டாமிடம் குமார் நவநீதன், மூன்றாமிடம் தம்பிதாசன் தனுசன். ஆண்களுக்கான கயிறு இழுத்தல் : முதலாமிடம் ஏ. மகாத்மா, இரண்டாமிடம் பி. காந்தி.

# புதிய பயிற்சியாளர்

பிரிட்டனின் முன்னணி ரென்னிஸ் வீரர் அன்டி முர்ரே தனது முழு நேர பயிற்சியாளராக முன்னாள் முதல் நிலைவீரர் இவான் லென்டிலை நியமித்துள்ளார்.

இவானின் போட்டி அனுபவம் மற்றும் பிரதான போட்டிகளில் அவர் வெளிக்காட்டிய திறமை எனது ஆட்டத்தில் தாக்கத்தை செலுத்தும் என முர்ரே இந்த நியமனம் குறித்து தெரிவித்துள்ளார்.

51 வயதான இவான் லென்டில் 8 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளை வென்றுள்ளார். அவர் மொத்தம் 94 ஏ.டி. பி. போட்டிகளில் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் முர்ரேவின் பயிற்சியாளராக செயற்படுகிறார்.

# வட்மோர் விலகல்




(கொல்கத்தா)

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து, டேவ் வட்மோர் விலகினார்.

இது குறித்து வட்மோர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், ""ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. என் மீது நம்பிக்கை வைத்து, பயிற்சியாளராக தேர்வு செய்த கொல்கத்தா அணி நிர்வாகத்தினருக்கும், எனக்கும் ஒத்துழைப்புத் தந்த வீரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், எனத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நடக்கவுள்ள ஐந்தாவது ஐ.பி.எல்., தொடர், பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இத்தொடர் ஆரம்பமாவதற்கு முன், கொல்கத்தா அணி புதிய பயிற்சியாளரை விரைவில் நியமிக்க வாய்ப்புள்ளது.

இதேவேளை, சமீபத்தில் இவரை, பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக நியமிக்க அந்நாட்டு கிரிக்கெட் சபை (பி.சி. பி.,) திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக கொல்கத்தா அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து, முறைப்படி பதவி விலகியுள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# தெரிவு அணியில் உள்வாங்கப்பட்டோர்




(புதுடில்லி)

கடந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான சிறந்த 11 பேர் கொண்ட அணியை கிரிக்இன்போ இணையதளம் வெளியிட்டுள்ளது.

கிரிக்இன்போ இணையதளம் சார்பில், ஆண்டுதோறும் டெஸ்ட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களைக் கொண்ட 11 பேர் அணி தேர்வு செய்யப்படும். கடந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் 11 பேரின் அணி விபரம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.11 அணியில், அதிகபட்சமாக இங்கிலாந்து சார்பில் ஆறு வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். சிறந்த ஒருநாள் போட்டிக்கான 11 அணியில், இந்திய வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது.

டெஸ்ட் அணி: அலெஸ்டர் குக் (இங்கிலாந்து), முகமது ஹபீஸ் (பாக்.), ராகுல் டிராவிட் (இந்தியா), கெவின் பீற்றர்சன் (இங்கிலாந்து), இயன் பெல் (இங்கிலாந்து), டரன்பிராவோ (மே.தீவுகள்,), மட் பிரையர் (இங்கிலாந்து), ஸ்டூவர்ட் புரொட் (இங்கிலாந்து), டேல் ஸ்டைன் (தென்னாபிரிக்கா), சயீத் அஜ்மல் (பாக்.), ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து).

ஒருநாள் அணி: சேவாக் (இந்தியா), ஷேன் வட்சன் (ஆஸி.,), ஹோலி (இந்தியா), மஹேல ஜெயவர்தனா (இலங்கை), யுவராஜ் சிங் (இந்தியா), டோனி (இந்தியா), அப்ரிடி (பாக்.), மிட்சல் ஜோன்சன் (ஆஸி.), லசித் மலிங்கா (இலங்கை), சகிர் கான் (இந்தியா), சயீத் அஜ்மல் (பாக்.).

# டெண்டுல்கர் சதம் பெற ஆஸி பிரதமர் வாழ்த்து



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சச்சின் டெண்டுல்கர் தனது 100ஆவது டெஸ்ட் சதத்தைப் பதிவு செய்ய வேண்டும். அதுவே எனது விரும்பம் என அவுஸ்ரேலிய பிரதமர் ஜுலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய மக்கள், அவர்களின் கிரிக்கெட் அணியை மிகவும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில், உங்களிடம் இருந்து (டெண்டுல்கர்) சிறப்பு வாய்ந்த அந்த 100ஆவது சதத்தையும் இந்தத் தொடரில் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் அதனையே எதிர்பார்க்கின்றேன். அதற்கு எனது வாழ்த்துகள் எனவும் அவர் தெரிவித்தார்.

# லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வேன்

## லியாண்டர் பயஸ்

(புதுடில்லி)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதும், கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் சம்பியன் பட்டம் வெல்வதும் இந்த ஆண்டு எனது இலட்சியமாக இருக்கும் என இந்திய ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக்கில் யாருடன் இணைந்து களமிறங்குவேன் என்பதை இப்போது கூற முடியாது. அது பற்றி, இந்திய ரென்னிஸ் சங்கம் தான் முடிவு செய்யும். சென்னை ஓப்பனில் திப்சாரெவிக்குடன் இணைந்து சிறப்பாக விளையாடுவேன் என நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

# நான் ரெடி!



(சிட்னி)

எனது முதலாவது டெஸ்டில் விளையாட தயாராக உள்ளேன். விளையாடும் 11 அணியில் இடம் பிடிப்பது பற்றி கவலைபட மாட்டேன். வாய்ப்பு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், போட்டியில் விளையாட நூறு சதவீதம் தயாராக இருப்பேன். ஏனெனில், போட்டியின் போது சில நேரங்களில் காயம் உள்ளிட்ட பிரச்சினைகளால் சகவீரர்கள் வெளியேறக் கூடும். இதனால் முன்னெச்சரிக்கையாக களத்தில் இறங்க தயாராக இருப்பேன். இவ்வாறு இந்திய துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார.

# டெஸ்ட் தொடரை முழுமையாக வெல்ல சச்சின், சேவாக்கை வீழ்த்தவேண்டும்

(சிட்னி)

சேவாக், சச்சின் டெண்டுல்கரை விரைவாக ஆட்டமிழக்கச் செய்தால் டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளும் என அவ்வணியின் முன்னாள் கப்டன் இயன் சபல் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி சில மாதங்களுக்கு இந்தியாவை 4-0 என்ற கணக்கில் முழுமையாக தோற்கடித்தது. அதே போல் அவுஸ்ரேலிய அணியும் வெற்றி பெற வேண்டும் என்றால் சேவாக்கையும், டெண்டுல்கரையும் ஓட்டம் குவிக்க விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும். சேவாக் களத்தில் நின்றால் ஓட்டக் குவிப்பு அதிகமாகிவிடும். அவரை சீக்கிரம் ஆட்டம் இழக்கச்செய்து விட்டால் 50 சதவீத பணி முடிந்து விடும். டெண்டுல்கர் தற்போது நல்ல ஆட்டத்திறனுடன் உள்ளார். சிட்னி அவருக்குப் பிடித்த மைதானம். எனவே அவரையும் சீக்கிரம் ஆட்டமிழக்கச் செய்வதற்கான வழிமுறைகளை கண்டறிவது அவ சியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# தீர்க்கமான டெஸ்ட் இன்று ஆரம்பம்

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்றைய தினம் கேப்டவுனில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே, இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கி யுள்ளதால் இப்போட்டியில் வெல்ல இரு அணிகளும் கடும் முயற்சிய்ய மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இழக்கப்பட்டதை உருவாக்கும் சக்தி இளம் பராயத்தினரிடமே உண்டு



(கொழும்பு) இயற்கையில் இழக்கப்பட்ட விடயங்களை மீண்டும் உருவாக்கும் ஆற்றல் இளம் பராயத்தினரிடம் இருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சிறப்புச் சித்தியெய்திய 1500 மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளங்களை பாதுகாக்கும் வகையில் எதிர்கால சந்ததியினர் முனைப்புடன் செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் இழக்கப்பட்ட பல விடயங்களை எதிர்காலத்தில் மீட்பதற்கு இளம் சந்ததியினரே முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அலவி மௌலானாவின் 80 ஆவது பிறந்த தினம்




(கொழும்பு) மேல்மாகாண ஆளுனரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவருமான அல்ஹாஜ் அலவி மௌலானாவின் 80 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்பொருட்டு விசேட 'ஜன்ம பிரசாதினி' பாராட்டு நிகழ்வொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

சினத்தையும், குரோதத்தையும் பின்தள்ளி அனைவர் மத்தியிலும், நட்புறவையும், ஒன்றுமையையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆளுனர் அலவி மௌலானா சேவையாற்றி வருவதாக ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தொழிற்சங்க வரலாற்றில் பாரிய சேவையாற்றி தொழிற்றுறையினருக்கு பல அனுகூலங்களை வழங்கியமைக்காக பொதுமக்கள் அவருக்கு கௌரவமளிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## அவிசாவளையில் மோதல் ஒருவர் பலி; இருவர் காயம்




(கொழும்பு) அவிசாவளையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் இருவரும் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.


தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மனைவி தாக்குதல் கணவன் உயிரிழப்பு

(கொழும்பு) மது போதையில் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் கலகத்தில் ஈடுபட்ட கணவனை, மனைவி பொல்லால் அடித்துக் கொலை செய்த சம்பவமொன்று பதுளை, மெதபத்தான பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடித்துவிட்டு வந்த கணவன் மனைவியுடன் கலகத்தில் ஈடுபட்டு தாக்குதல் நடத்தியுள்ளார். இதன்போது ஆத்திரமடைந்த மனைவி கணவனை பொல்லால் தாக்கியுள்ளார். அதிக போதையில் இருந்தமையால் குறித்த நபர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். சந்தேகநபரான மனைவி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பதினைந்து பாடசாலைகளுக்குரிய உயர்தரப் பெறுபேறு அனுப்பப்படவில்லை



(கொழும்பு) மாத்தளை வில்கமுவ வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட 15 பாடசாலைகளுக்குரிய பெறுபேறுகள் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லையென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதாக கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்காத மாணவர்கள் அது குறித்துத் தகவல்களை அறிந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்விப் பொதுத தாரதர உயர்தரப் பரீட்சையின் ரஷ்ய மொழிப் பரீட்சையில் தோற்றிய 38 மாணவர்களுக்கான பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

தமக்கான பெறுபேறுகள் முறையாக வெளியிடப்படுமா என்ற சந்தேகம் இந்த மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் சங்கங்களின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கருத்துத் தெரிவிக்கையில், பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக தகவல்களைக் கோரும் மாணவர்களுக்கு உடனடியாக பெற்றுக்கொடுக்குமாறு ஏற்கனவே அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வருட இறுதி விடுமுறை தினங்கள் காரணமாக அந்தப் பணிகளில் சிறு தாமதம் ஏற்பட்டிருந்தது எனத் தெரிவித்தார்.

## சவுதி அரேபியாவில் இலங்கையரை காணவில்லை

(கொழும்பு) சவுதி அரேபியாவில் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்த 57 வயதான இலங்கையைச் சேர்ந்த ஆணொருவர் கடந்த மாதம் 19 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கடந்த 10 வருடங்களாக குறித்த நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர் என இலங்கையில் உள்ள அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். காணாமல் போனவரின் மகன் இதுகுறித்து தெரிவிக்கையில், தமது தந்தைக்கு ஏற்பட்ட நிலையையிட்டு தமது குடும்பத்தில் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது.

இவர் விபத்து ஒன்றில் சிக்கியதாக முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. தமது தந்தையின் நிலை குறித்து அவருடன் தொழில் புரிந்த நண்பர் ஊடாகவே இதனை அறிந்து கொண்டோம்.

எனினும் தொழில்புரிந்த நிறுவனத்தில் இருந்து எந்த வித உத்தியோகபூர்வத் தகவல்களும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவித்தார்.

# 20 இலங்கைப் பெண்கள் மலேசியாவில் நிர்க்கதி

(கொழும்பு) தொழில் நிமித்தம் மலேசியாவுக்கு சென்றிருந்த மேலும் 20 இலங்கைப் பெண்கள் நிர்க்கதியாகியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குருநாகல் பிரதேசத்திலுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றினூடாக தாம் மலேசியா சென்றதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முகவர் நிலையம் சுற்றுலா கடவுச்சீட்டு மூலம் தம்மை மலேசியாவுக்கு அழைத்துச் சென்று நிர்க்கதியாக்கியுள்ளதாகவும், தங்க நகைகளை அடகு வைத்து முகவர் நிலையத்திற்கு பணம் செலுத்தியதாகவும், தற்போது உணவு குடிநீர் வசதி கள்கூட இன்றி பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறித்த பெண்கள் தெரிவித்துள்ளனர்.

மொழிப் பிரச்சினை காரணமாக மலேசிய அதிகாரிகளுக்கு தமது பிரச்சினைகள் தொடர்பில் விளக்கிக்கூற முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிர்க்கதிக்குள்ளாகியுள்ள பெண்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கவோ அவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கோ அதிகாரிகள் முன்வரவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதுகுறித்து மலேசியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் நந்த கொடகே தெரிவிக்கையில், தொழில் நிமித்தம் மலேசியா வந்து நிர்க்கதியான நிலையில் அநேகமான இலங்கையர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

## பத்துப் புதிய நீர்த்தேக்கங்களை இவ்வாண்டில் நிர்மாணிக்கத் திட்டம்

(கொழும்பு) விவசாய செயற்பாடுகளுக்காக தற்போது நீர்பாய்ச்சலில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள பிரதேசங்களை இலக்காகக்கொண்டு புத்தாண்டில் புதிதாக 10 குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாக, நீர்ப்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக, இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 3 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பதுளை-மொரானகுளம், அம்பாறை- களுகல்ஓயா, மன்னார்-மல்வத்துஓயா, பொலநறுவை- கவுடுல்ல குளம் உள்ளிட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை இவ்வாண்டில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, அநுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

# தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் தாயகம் திரும்புவதில் ஆர்வம்



(கொழும்பு) தமிழ்நாடு, ராமநாதபுரம் மாவட்ட மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து, வாரத்துக்கு 10 முதல் 15 பேர் வரை இலங்கைக்குத் திரும்பிவர ஆரம்பித்துள்ளனர்.

மண்டபம் அகதிகள் முகாம், 1940இல் பர்மாவில் இருந்து வந்த அகதிகளுக்காக கட்டப்பட்டது. 1983இல், இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த பின், இங்கிருந்த தமிழர்கள், இந்தியாவுக்குச் செல்லத் தொடங்கினர். மண்டபம் முகாம், இவர்களை தங்கவைக்கும் இடமாக மாறியது. இதில், 10 ஆயிரம் பேர் வரை தங்கியிருந்தனர்.

கடந்த 26 ஆண்டுகளாக நடந்த இலங்கை உள்நாட்டுப் போர், 2009 இல் நிறைவுக்கு வந்தது. இதையடுத்து, வாரம் 15 பேர் வரை இலங்கை திரும்பிவர ஆரம்பித்துள்ளனர். தற்போது இந்த முகாமில், 2,400 பேர் மட்டுமே உள்ளனர். வவுனியாவைச் சேர்ந்த அகதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், சிறுவயதில் இங்கு வந்தேன்.

மீண்டும் அங்கு செல்கிறேன். எங்கள் நிலம் கிடைக்குமானால் மிகுந்த சந்தோசம். இல்லையென்றாலும், விவசாயம் செய்து பிழைத்துக் கொள்ளலாம். தாயகத்திற்கு திரும்புவது சந்தோசமளிக்கிறது என்றார்.

## எரிவாயுவின் விலையை அதிகரிக்கும் தீர்மானமில்லை

**நுகர்வோர் அதிகார சபை**

(கொழும்பு) எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு லாப் காஸ் நிறுவனம் கோரியபோதிலும், இது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையென நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலையை 200 ரூபாவால் அதிகரிக்குமாறுகோரி கடந்த மாதம் லாப் காஸ் நிறுவனம் விண்ணப்பித்திருந்தது. இருப்பினும் இந்த விலை அதிகரிப்புத் தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மதிப்பீடு தேவைப்படுகின்ற நிலையில், தற்போதைய நிலைமையின் கீழ் சமையல் எரிவாயு விலை அதிகரிப்புத் தொடர்பில் மீளாய்வு செய்யப்படலாமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இனங்களைப் பிரிக்கும் தீர்வையே கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

தமிழ், சிங்கள இனங்களை தனித்தனியாகப் பிரித்து ஆளும் தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இது இனங்களிடையே கசப்புணர்வையே ஏற்படுத்தும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதே சிறந்த தீர்வாகும் எனவும் அமைச்சர் கூறினார்.

சிங்கள மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான தீர்வை வழங்குவதை எதிர்க்கும் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் எதிர்காலத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏறும் நிலைமை உருவாகும்.

நாங்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியில் சம உரிமைகளை வழங்கி தமிழ் மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ், சிங்கள மக்களைத் தனித் தனியாகப் பிரித்து ஆளும் தந்திரோபாயத்தையே முன்னெடுக்கின்றது.

இது பிழையான செயற்பாடாகும். அத்தோடு இனங்களிடையே கசப்புணர்வையும் ஏற்படுத்தும். ஆகவே இலங்கையர்கள் என்ற ரீதியில் சிங்கள மக்கள் தமது கலை, கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்துக் கொண்டும் தமிழ் மக்கள் தமது கலை, கலாசார, சகல பாரம்பரியங்களின் தனித்துவத்தை பாதுகாத்துக் கொண்டும் வாழும் தீர்வே சிறந்த தீர்வாகும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# 37 ஆயிரம் வாகன விபத்துக்கள் 2500 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் பதிவான 37 ஆயிரம் வாகன விபத்துக்களில் சுமார் இரண்டாயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதிகளும், பாதசாரிகளும் உரிய முறையில் வீதி ஒழுக்க விதிகளை கடைப்பிடிக்காமையே இத்தகைய விபத்துக்களுக்கான காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வாகன விபத்துக்கள் தொடர்பில் குற்றவாளிகளாக காணப்படுவோரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் சமாதான செயலகத்தில் நிதிமோசடி இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம் சமாதான செயலகத்தில் பல்வேறு நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முஸ்லிம் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் சபையின் கூட்டங்களுக்கு 1,168,207 ரூபா செலவிடப்பட்டுள்ளமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது

முஸ்லிம் சமாதான செயலகத்தின் தலைவர் சிப்லி அஸீஸிற்கு இவ்வமைப்பின் செயலாளரும், சட்டத்தரணியுமான ஜாவிட் யூசுப் அனுப்பியுள்ள கடிதத்திலேயே கேள்வி எழுப்பப்பட்டுள்ளது

இது தொடர்பில் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் தான் கேள்வி எழுப்பியதாகத் தெரிவித்த ஜாவிட் யூசுப், இது குறித்த விசாரணைகள் இடம்பெறும் என வாக்குறுதி வழங்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை, 2008 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்கு இடையில் முஸ்லிம் சமாதான செயலகத்துக்கு நன்கொடையாளர்களிடமிருந்து 46 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது

ஆனால், இவ்வமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இடம்பெற்ற தினத்தில் 300,000 ரூபா மாத்திரமே வங்கியிலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேவேளை,. ஏனைய பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது தொடர்பில் குறித்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது

இந்நிலையில், இச்செயலகத்திற்கு நிதியுதவி வழங்கிய சிறிலங்காவுக்கான நோர்வேத் தூதரகம் விசாரணைகளை மேற்கொளவதற்கு விசேட கணக்காய்வு குழுவை நியமித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜே.வி.பி. உறுப்பினர்களுடன் புதிய கட்சி உருவாக்கப்படும்

## புபுது ஜயகொடி

(கொழும்பு)

ஜே.வி.பியின் உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் புதிய கட்சியொன்றை உருவாக்கப் போவதாக அந்த முன்னணியின் கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகித்த 9 உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் தெபரவெளயில் இடம்பெற்ற வருடாந்த மாநாட்டின் போது செயற்குழுவில் இருந்து அகற்றப்பட்டனர்.

அதன்பின்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கிளர்ச்சிக்குழுவின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொடி கருத்து வெளியிட்டார்.

தாம் உட்பட ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவில் இருந்து விலக்கப்பட்ட 9 உறுப்பினர்களும் இணைந்து புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

தாம் கட்சியில் இருந்து விலக்கப்பட்டாலும், பெரும்பான்மை ஆதரவு தமக்கிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தென்கிழக்காசிய நாடுகளின் கொடி கொழும்பில் முதல்முறையாக ஏற்றிவைப்பு



(கொழும்பு)

ஆசியான் எனப்படும் தென் கிழக்காசிய நாடுகளின் சங்கத்தின் உத்தியோகபூர்வ கொடி முதற் தடவையாக கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை ஏற்றப்பட்டது. இந்தக் கொடி கொழும்பிலுள்ள ஆசியான் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் தூதுவராலயங்கள் ஆகியவற்றில் ஏற்றப்பட்டுள்ள தேசியக் கொடிக்கு அருகில் ஏற்றப்பட்டுள்ளது.

இந்தோனிஷியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் கடந்த மே மாதம் நடைபெற்ற எட்டாவது ஆசியான் அமைப்பின் இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே, இதன் உத்தியோகபூர்வக் கொடியினை அங்கத்துவ நாடுகளின் உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் தூதுவராலயங்கள் ஆகியவற்றில் ஏற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது

இதற்கிணங்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் பங்குபற்றலுடன் கொழும்பிலுள்ள இந்தோனிஷியத் தூதுவராலயத்தில் ஆசியான் அமைப்பின் கொடி உத்தியோகபூர்வ நேற்று ஏற்றப்பட்டது

பிரியாவிடை பெற்றுச் செல்லவுள்ள இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் தபார் ஹுசைன், இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் மயே லிவின் மற்றும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் அஸ்மி செய்னுடின் ஆகியோர் ஏற்றிவைத்தனர்

இந்தோனேஷியா, வியட்நாம், பூருனை, கம்போடியா, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், பர்மா, லாவோஸ் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஆசியான் அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷிராந்த அமரசேகரா பிணையில் விடுதலை

(கொழும்பு)

சிறிகொத்த சம்பவம் தொடர்பில் மேல்மாகாண சபை உறுப்பினர் ஷிராந்த அமரசேகர நேற்று நுகேகொடை நீதிமன்றில் ஆஜரானார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணை அனுமதிக்கு அமைவாக ஷிராந்த அமரசேகரவையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக பொலிஸார் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கவில்லை, இதன் பிரகாரம் இந்த வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

# அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் நத்தார் ஒளிவிழா நிகழ்வுகள்

(வடமராட்சி கிழக்கு)

தாளையடி புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் நத்தார் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் இளைஞர் மன்றத் தலைவர் பெ.றீகதாஸ் தலைமையில் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தாளையடி பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் நாதன் அடிகள் பிரதம விருந்தினராகவும், தாளையடி முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு பா.இருதயதாஸ் அடிகள், தாளையடி றோ.க.த.கலவன் பாடசாலை அதிபர் ந. கண்ணதாசன், தாளையடி உப அஞ்சலதிபர் மா.நிர்மலாதேவி, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், முன் பள்ளி மாணவர்கள், இளைஞர் மன்றத்தினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(70)

# நவீன தொழில்நுட்பத்துடன் ஹோமாகமவில் அளவை ஆய்வுகூடம்

(கொழும்பு)

ஹோமாகம பிரதேசத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அளவை ஆய்வுக்கூடமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்ளாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

மோசடிகளுக்கு பயன்படுத்தப்படும் அளவை உபகரணங்களை கண்டுபிடிப்பது, அளவை உபகரணங்களை சோதனைக்கு உட்படுத்துவது, வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அளவை உபகரணங்களை நிர்வகிப்பது, மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவது ஆகிய பணிகள் புதிய ஆய்வுகூடத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

# வடமராட்சி கிழக்கில் நத்தார் ஒளி விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நத்தார் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தாளையடிப் பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் பிரதம விருந்தினராகவும், மருதங்கேணி கிராம அலுவலர் பூ.வ.தவராசா, தாளையடி கடற்றொழில் பரிசோதகர் வி.கலிஸ்ரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிறீதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (70)

# பள்ளத்தில் பாய்ந்தது பஸ் 28 பயணிகள் படுகாயம்




(கொழும்பு)

எந்தான பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, கஹவத்தை கொஸ்கெல்ல பகுதியில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் இரத்தினபுரி மற்றும் கஹவத்தை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 110 அடி பள்ளத்தில் வீழ்ந்த பஸ்ஸிலிருந்த அனைவருமே காயமடைந்துள்ளனர்.

## இன்னும் வளராத பெரியவர்களுக்கு



வசந்தம் பற்றிய
பாடலுக்கு மெட்டமைத்துப்
பிறகு,
இலையுதிர்காலம் பற்றியும்
எச்சரிக்கிறீர்கள்

பகல் வெளிச்சத்துக்கு
வரவேற்புக் கூறுகையில்
இரவைக் காட்டிப் பயமுறுத்துகிறீர்கள்

நிலம் பற்றி நம்பிக்கையூட்டி
நீர்நிலைகளுக்குள் இறங்கி விடுகிறீர்கள்

தூக்கணாங் குருவிக்கும்
தூக்குக் கயிறுக்கும்
சம்பந்தம் என்ன?

எது பற்றியும் சொல்லிக் கொடாது
ஓர் இடைவெளியை
விட்டுவைத்தால் என்ன?

கற்களைப் புடலங்காய்க்குக்
கட்டுவதா அவற்றால்
காகம் துரத்துவதா என
எமக்குத்தான் புரியவில்லை
போகட்டும்....
சிறுவர்களையாவது
விட்டு வையுங்கள்.

அவர்கள், தாமாய், இவைபற்றி
அறியட்டும் அறிந்த பிறகு
கற்களால் சண்டையிடுவதா
இல்லை
கற்களால் வீடு கட்டுவதா என
அவர்கள் தீர்மானிக்கட்டும்.

*- இளவாலை விஜயேந்திரன்*

# ஹிப்போகிரடஸ் காலத்தில்..



**கா**ன்ஸர் என்ற இந்த நோய்க்கு எப்படி இந்த பெயர் வந்தது? நோய்தான் ஆபத்தானது, கதை சுவாரஸ்யமானது.

முதன் முதலில் ஹிப்போகிரடஸ்தான் கி.மு.400 ஆண்டளவில் அவரது மருத்துவ குறிப்புகளில் இந்த நோயினை கார்கினோஸ் என்று குறிப்பிடுகிறார். கிரேக்கத்தில் கார்கினோஸ் என்றால் நண்டு. இந்த கான்ஸர் கட்டியானது ஒரு விதத்தில் அது உருவாகியிருக்கும் இடத்தை தனது இரத்த நாளங்களால் இறுகப் பற்றிக்கொண்டிருக்கும். அது ஒரு நண்டு மணலில் தனது கால்களை விரித்து வட்டம் போடுவதைப் போல ஹிப்போகிரடஸுக்கு தோன்றியுள்ளது. உண்மையிலும் சில கான்ஸர் கட்டிகள் நண்டைப் போலவே தோற்றமளிக்கும்.

மற்றொரு கிரேக்க வார்த்தையும் உள்ளது. அது ஆன்கோஸ். அதாவது ஆன்கலஜி என்று கான்ஸர் நோயினைப் பற்றிய துறையினை குறிக்கும் இப்போதைய வார்த்தை இதிலிருந்துதான் வந்திருக்கும் என்று கூறுகிறார்கள். ஆன்கோஸ் என்றால் ஒரு கட்டி என்ற அர்த்தத்தில் கிரேக்கர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஹிப்போகிரடஸ் காலத்தில் மைக்ரோஸ்கோப் இருந்ததில்லை. எனவே அவர்களுக்கு செல் எனப்படும் அணுவைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆகையால், பல பிறழ் அணுக்கள் சேர்ந்துதான் கான்ஸர் வகைக் கட்டிகளை உருவாக்குகிறது என்பது அவர்களுக்கு தெரிந்திருக்காது. மேலும், அக்காலத்தில், கிரேக்கர்கள் முழுவதுமாக திரவ இயந்திரவியலில் (Fluid Mechanics) மூழ்கியிருந்தனர்.

கிரேக்கர்கள் அக்கால கட்டத்தில் திரவ இயந்திரவியலில் பல புரட்சிகரமான கண்டுபிடிப்பு களை கண்டறிந்து கொண்டிருந்தனர். நீர் சக்கரம், பிஸ்டன், வால்வு, சேம்பர் போன்ற நவீன யுக்திகள் யாவுமே அப்போது கண்டறியப் பட்டவைதான். மேலும், குளியல் தொட்டியில் இருந்து, யுரேகா என்று கத்திக் கொண்டு ஓடி வந்தாரே ஆர்ககிமெடிஸ்! அவரின் புகழ் பெற்ற ஆர்க்கிமெடிஸ் தத்துவம் (Archimedes Principle) உருவானதும் அந்த கால கட்டத்தில் தான்.

கிரேக்கர்களின் சிந்தனை, செயல் எதிலும் திரவ இயந்திரவியலே வியாபித்திருந்த அக்காலத்தில், திரவ இயந்திரவியல் மருத்துவத் துறையிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டது. வியாதிகளின் குணங்களை விவரிப்பதிலும்கூட ஹிப்போகிரடஸ் திரவத்தையே பயன்படுத்துகிறார்.

மனித உடலைக்கூட ஹிப்போகிரடஸ் நான்கு வகை உயர்த் திரவமாக பிரித்து விவரிக்கிறார். இரத்தம், கரும் பித்தம், மஞ்சள் பித்தம் மற்றும் சளி. இதில் ஒவ்வொரு திரவமும் அதற்கான தனிப்பட்ட நிறத்தில் (முறையே, சிவப்பு, கறுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை) இருக்கும் என்றும், அந்த திரவங்கள் சரிவிகிதத்தில் இருக்கும் வரை உடல் சரியாக இருக்கும் என்றும் விளக்குகிறார்.

ஹிப்போகிரடஸ், கான்ஸர் நோய் கண்டறியப் பட்டால், அதற்கு எந்த விதமான சிகிச்சையும் அளிக்காமல் விட்டுவிடுவதே நலம் என்றார். அந்த வகையில், நோயாளி உயிர் வாழ சில வாய்ப்புகள் மிச்சமிருக்கும் என்று நம்பினார்.

ஹிப்போகிரடஸ் கான்ஸரைப் பற்றி சொன்ன ஐந்து நூற்றாண்டுகளுக்கு பின் மருத்துவர் கிளாடியஸ் கேலன் கி.பி.160 களில், கான்ஸரைப் பற்றிய தனது குறிப்புகளை எழுதுகிறார். அவரும் உடலில் உள்ள கரும் பித்த திரவத்தால்தான் கான்ஸர் உருவாகிறது என்ற தனது கூற்றினால், ஹிப்போகிரடஸ் சொன்ன அதே தீர்வினையே குறிப்பிடுகிறார். அறுவை சிகிச்சை செய்து அந்த கரும் பித்த திரவம் மீண்டும் அதே இடத்தில் வந்து சேர்வதை தடுக்க முடியாது என்பதால், கான்ஸர் நோய்க்கு அறுவை சிகிச்சையின் மூலம் தீர்வு காண முடியாது என்று நம்பினார்.

கான்ஸர் நோய்க்கான அவரின் கரும் பித்த திரவ கோட்பாடு (Black bile theory) பின்னாளில் வந்த பல மருத்துவர்களையும் தீவிரமாக ஆட்கொண்டிருந்தது. கான்ஸர் நோய்க்கு அறுவை சிகிச்சை செய்வது ஒரு முட்டாளின் வேலை என்று, கேலனே சொல்லி விட்டார்! எனவே யாரும் அறுவை சிகிச்சை என்னும் அந்த வீண் வேலையில் ஈடுபட்டு உங்கள் தரத்தை தாழ்த்திக் கொள்ளாதீர்கள் என்றும் பல மருத்துவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள்.

ஒருவிதத்தில் கேலன், கான்ஸர் நோயாளிகளுக்கு பெரும் நன்மை செய்தார் என்றுதான் சொல்லவேண்டும். மயக்க மருந்துகளும், நோய் தடுப்பு மருந்துகளும் இல்லாத அந்த காலகட்டத்தில் அறுவை சிகிச்சை என்பது மரண விளிம்பிற்கு சென்று மீண்டு வருவதற்கு சமம். அந்த காலத்தில் எந்தெந்த முறைகளில் அறுவை சிகிச்சைகள் செய்தார்கள் என்று விவரித்தால் தாங்க மாட்டீர்கள். நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாத கொடுமை அது.

ஆனாலும், பின்னாளில் கேலன் தியரி தவறானது என்று தெரிய வந்தது. கான்ஸர் நோய்க்கான உண்மையான சிகிச்சை முறைகள் கண்டறியப்பட்டது.

## சுவை நிரம்பிய வாழ்வு



நாம் பலவற்றையும் தன்னுணர்வற்று, இயந்திரத்தனமாக, ரோபோவைப் போல உண்கிறோம். சுவையை நீ உணரா விட்டால் நீ செய்தது வெறும் அடைப்பதுதான். மெதுவாகச் செய். சுவையைப் பற்றிய விழிப்புணர்வோடிரு. நீ இனிப்பை உண்கையில் அந்த இனிப்பாகவே மாறிவிடு. அப்போது அதை உன் உடல் முழுவதும் உணர முடியும்.

வெறும் வாயில் மட்டுமல்ல, வெறும் நாக்கில் மட்டுமல்ல, அதை உடல் முழுவதும் உணர முடியும்! மற்ற மரபுகளுக்கெல் லாம் முற்றிலும் முரணானதாகத் "தந்த்ரா" தெரிவது இப்படித் தான்.

ஜைனர்கள் சுவையே இருக்கக்கூடாது என்கிறார்கள். மகாதமாகாந்தி தன்னுடைய ஆச்சிரமத்தில் சுவை கூடாது என்பதை ஒரு விதியாகவே வைத்திருந்தார்.

எதையும் சுவைக்கக்கூடாது. சாப்பிடு, ஆனால் சுவைக்காதே, சுவையை மறந்துவிடு. சாப்பிடுவது தேவையானது, ஆனால் அதை இயந்திரத்தனமாகச் செய். சுவை ஓர் ஆசை, ஆகவே சுவைக்கக் கூடாது என்று கட்டுப்பாடு சொன்னார்.

"தந்த்ராரு" சொல்கிறது எவ்வளவு முடியுமோ அந்த அளவு சுவை, அதிக புலனுணர்வு கொள். உயிர்த்துடிப்போடிரு. மேலும் வெறுமனே சுவைப்பதில் ஆழமாகச் செல்வதுடன் நிற்காமல் சுவையாகவே மாறிவிடு.

"தந்த்ரா ரகசியங்கள்" புத்தகத்தில் ஓஷோ



## ஐஸ்வர்யாவை விட 10 வயது குறைவு

**த**மிழில் முன்னணி நடிகையாகக் கொடி கட்டிப் பறந்த த்ரிஷாவுக்கு இப்போது தமிழில் பெரிய அளவில் வாய்ப்புகள் இல்லை. வயதாகி விட்டதால்தான் வாய்ப்புகள் குறைந்து விட்டதாகவும் சில தகவல்கள் வெளியாகின. இது குறித்து த்ரிஷாவிடம் கேட்டால்...

"எனக்கு வயதாகி விட்டது என்பது உண்மைதான். இப்போது எனக்கு 29 வயது. சினிமா துறையில் இதெல்லாம் ஒரு வயதா? 40 வயதைத் தொடப் போகும் ஐஸ்வர்யா ராய் இன்னும் கதாநாயகியாக நடித்துக்கொண்டிருக்கிறார். நடிகைகள் தங்கள் உடலமைப்பை ஆரோக்கியமாக, அழகாக வைத்துக் கொண்டால் போதும் அந்த ஃபிட்னஸ் எனக்கு இருக்கிறது.

இன்னும் சில வருடங்கள் வரை அதைத் தக்க வைத்துக்கொள்வேன். அதுவரை நடித்துக் கொண்டிருப்பேன். இப்போது வாய்ப்பில்லை என்று யார் சொன்னது? தெலுங்கில் நான்கு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு ஹிந்திப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செயயப்பட்டிருக்கிறேன். தமிழ் மொழியில் நடித்தால் மட்டும்தான் பிஸியான நடிகையா?" என்கிறார் த்ரிஷா.

இப்படியான விளக்கங்கள் கொடுக்க வேண்டியிருப்பது, வயதாகி விட்டதன் அறிகுறிகளில் ஒன்று என்கின்றனர் கோலிவுட் நிருபர்கள்.

## உலகைக் கலக்… மர்லின் மன்றோ அ…

**உ**லகம் முழுவதிலும் கோடிக்கணக்கான ரசிகர்களிடையே, மிகவும் பரிச்சயமான இந்த காட்சி, 56 வருடங்களுக்கு முன் வெளியான, "தி செவன் இயர் - இச்" என்ற படத்தில் இடம் பெற்றது.

மர்லின் மன்றோ அணிந்திருக்கும் வெளளை நிற ஆடை, காற்றில் மேல் நோக்கி பறக்கும் போது, அவரது அழகான கால்களும், கொஞ்சம் உள்ளாடையும் தெரியும். அவரது ஆடை, மேலும் பறக்காமல் இருக்க, அவர் பிடித்துக் கொண்டிருப்பார்.

இதே மாதிரி காட்சியை பின்னர் பல பல இயக்குனர்கள் கையாண்டார்கள். "உள்ளத்தை அள்ளித் தா" தமிழ்ப்படத்திலும் "அழகிய லைலா" என்று நடிகை ரமபா அறிமுகமாகும் காட்சி இதே பாணியிலேயே எடுக்கப்பட்டு படமும் சக்கைபோடு போட்டது காலழகுக் கனவு நாயகியாகவே ரசிகர்களை அவர் கவர்ந்தார். இந்தச் செய்தி ரம்பாவைப் பற்றிய தல்ல, மர்லின் மன்றோவின் அந்த வெள்ளை ஆடை பற்றியது.

கலிபோர்னியாவில் சமீபத்தில் நடைபெற்ற ஏலத்தில், மர்லின் மன்றோ அணிந்த அந்த ஆடை, நினைத்துக் கூட பார்க்க முடியாத விலைக்கு, 23 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. திரைப்பட உடைகளிலேயே அதிக விலைக்கு விற்கப்பட்டது இது தான்!

மர்லின் மன்றோ நடிதத, "ஜெனடில்மென் ப்ரெபர் ப்ளான்ட்ஸ்" படத்தில் அணிந்த சிவப்பு நிற ஆடை, ஆறு கோடி ரூபாய்க்கும், ஆட்ரி ஹெப் பர்ன், "மை பேர் லேடி" படத்தில் அணிந்த ஆடை, 18 கோடி ரூபாய்க்கும், எலிசபெத் டெய்லர், "நேஷனல் வெல்வெட்" படத்தல் அணிந்த ஆடை, 30 லட்ச ரூபாய்க்கும் விற்கப்பட்டன.



அல்பிரெட் ஹிட்ச்கொக் இயக்கிய, "டு காட்ச எ தீப்" படத்தில், கிரேஸ் கெல்லி அணிநத ஆடை, இரண்டு கோடியே, 70 லட்சம் ரூபாய்க்கும் விற்பனையானது. உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர், சார்லி சாப்ளின், "தி லிட்டில் ட்ராம்ப்" படத்தில் அணிந்த தொப்பி, 67 லட்ச ரூபாய்க்கு விற்று, சாதனை படைத்தது.

# யதார்த்தத்தைப் புறக்கணித்து கற்பனையில் வாழும் சமூகம்!

தமிழர்களிடம் ஒரு வகையான கற்பனாவாதத தன்மை "காவியக் கனவு மனம்" உண்டு. அது அவர்களிடத்தில் எப்போதும் மிகைத்தன்மையின் மீதான பிடிப்பை ஏற்படுத்துகிறது. எல்லாவற்றிலும் அவர்கள் யதார்த்தத்துக்கு அப்பால் சிந்திக்கின்ற ஒரு போக்கை நாம் அவதானிக்கலாம்.

மிகை மதிப்பீடுகளும் மிகை உணர்ச்சியும் தமிழர்களுடன் இரண்டறக் கலந்தவை என்று அரசியல் ஆய்வாளரான நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வார். யதார்த்தத்தை அதிகம் விரும்பாத



"யதார்த்தத்துக்குப் புறம்பான சமூகமாக தமிழ்ச் சமூகம் இருக்கிறது என்பது அவருடையகணிப்பு. (அதாவது, பெரும்பான்மையான தமிழர்கள் அப்படி இருக்கிறார்கள் என்பதே இங்கே குறிப்பிடப்படுவது. பெரும்பான்மையினரே அதிகமான சந்தர்ப்பங்களிலும் அலைகளை உருவாக்குவோராகவும் போக்குகளைத் தீர்மானிப்போராகவும் இருப்பதால், அவர்களை மையப்படுத்தியே இங்கே பேச வேண்டியிருக்கிறது).

இதற்கு வரலாற்று ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் தமிழர்கள் மிகையதார்த்தத்திற்குள் பழக்கப்பட்டமையே காரணமாகும். என்றபடியாற்தான், சிவாஜி கணேசன் தமிழர்களால் அதிகம் விரும்பப்பட்டார். அவருடைய மிகை நடிப்புக்காகவே அவர் இன்னும் தமிழர்களால் கொண்டாடப்படுகிறார்.

யதார்த்தத்துக்கு நெருக்கமான சினிமாவைத் தமிழர்கள் அதிகம் விரும்புவதில்லை. அரசியலிலும் அவர்கள் இத்தகைய மிகைகளையே விரும்புகிறார்கள். நம்புகிறார்கள். ஏற்றுக்கொள்கிறார்கள். யதார்த்தத்தை மட்டுமல்ல உண்மையையும் கூட அவ்வளவாக விரும்பாத, ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாத சமூகத்தினராகத் தமிழ்ச் சமூகத்தினர் இருக்கின்றனர்.

பொதுவாகவே தமிழர்களுக்கு உண்மையை விட, யதார்த்தத்தை விடப் புனைவுகளும் மிகை மதிப்பீடுகளும் சுவையூட்டும் விசயங்களாக இருக்கினறன. அவையே அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியையும் அளிக்கின்றன. மட்டுமல்ல, இந்தப் புனைவுகளையும் மிகை மதிப்பீடுகளையுமே அதிகமான தமிழர்கள் உண்மையென்றும் நம்புகிறார்கள். இதைத் தவிர்த்து, இவற்றுக்கு அப்பால் உள்ள உண்மைகளை வெளிப்படையான யதார்த்தத்தை அறிந்து கொள்வதற்கும் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் அவர்கள் தயாராக இருப்பது குறைவு. அல்லது அது இல்லை எனலாம்.

இந்தக் குறைபாடுகளால்தான், தமிழர்கள் அதிகமான விசயங்களில், மிகவும் பின்தங்கி யோராக இருக்கின்றனர். உண்மையையும் யதார்த்தத்தையும் உணர்ந்து கொள்ளாதோரும் அவற்றை ஏற்றுக்கொள்ளாதோரும் அவற்றை அங்கீகரிப்பதற்குத் தயாராக இல்லாதோரும் ஒருபோதுமே வெற்றிக் கனியைப் பறிக்கவும் முடியாது. தமக்கு முன்னாலிருக்கும் நெருக்கடிகளையும் தடைகளையும் முறியடிக்கவும் முடியாது.

நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியையும் பண்பாட்டுச் சிறப்பையும் உடைய தமிழ்ச் சமூகம், இன்றைய அரசியல் மற்றும் கலாசாரத் தளங்களில், மிகப் பின்தங்கியே இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு அதிக சிரமங்கள் தேவையில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரையில், அறிவியலிலும் மொழியிலும் பண்பாட்டிலும் வரலாற்றிலும் வீரத்திலும் பிற விடயங்களிலும் மற்றச் சமூகங்களை விடவும் தாமே சிறப்பானவர்கள் என்று பெருமையாகக் கூறிக்கொள்வர். அவ்வாறான ஒரு கருதுகோள் பொதுவாகவே பெரும்பான்மையான தமிழர்களிடம் ஆழமாக வேரூன்றியுள்ளது.

இத்தகைய சிறப்பையும் முக்கியத்துவங்களையும் பிற சமூகத்தினரும் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தமிழர்கள் அங்கீகரிப்பதற்குத் தயாராக இல்லை. அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

ஆனால், பிற சமூகங்கள் தங்களிடமிருக்கும் அத்தகைய அடிப்படைகளை மேலும் வளர்த்து, சமகாலத்துக்குப் பொருத்தமான முறையில், அவற்றை மாற்றியமைத்துள்ளன. அதனால், அந்தச் சமூகங்கள் முன்னிலைப் பாத்திரத்தை வகிக்கக் கூடியதாகவும் வெற்றியடைந்த சமூகங்களாகவும் இருக்கின்றன. இதைக்கூடத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வதும் இல்லை. புரிந்து கொள்வதும் இல்லை.

இதேவேளை, தமிழர்கள் தங்களின் பழம் பெருமைகளையும் சிறப்புகளையும் மிகை உணர்ச்சியுடன் பேசிக்கொண்டிருப்பனரே தவிர, தமது சிறப்பான அடையாளங்களை வைத்து, தமக்குத் தேவையானவற்றை உருவாக்கிக் கொள்வதிலும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதிலும் அக்கறைப் படுவதில்லை. அதில் வெற்றி பெறுபவரகளாகவும் இல்லை.


இந்தக் குறைபாடுகளைத் தீர்த்துக் கொளவதற்கு வெறும் கற்பனைகளும் மிகு புனைவுகளும் போதாது. உண்மை நிலைமைகளைக் குறித்த விளக்கமும் யதார்த்தத்தைப் பற்றிய புரிதலுமே அவசியமாகும்.

உண்மைகளையும் யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளும் மரபானது தமிழர்களிடம் வளர்ச்சியடையாமை என்பது துரதிருஷ்டமானதே. உண்மைகளை அறிந்துகொண்டாற்தான், அவற்றை ஏற்றுக் கொண்டாற்தான் அவற்றின் பெறுபேறுகளில் இருந்தும் அவற்றின் படிப்பினைகளில் இருந்தும் முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும். அதைப் போல யதார்த்த நிலைமைகளை விளங்கிக் கொண்டாலே அதற்கமையத் திட்டமிடவும் செயற்படவும் இயலும். வெறும் கற்பனைகளில் யதார்த்த வாழ்க்கையை ஒருபோதுமே எதிர்கொள்ள முடியாது.

*நன்றி: மறுஆய்வு*

---

# இலங்கை அரசியலில் சாதி, இனம், மொழி, மதம் என்பனவற்றின் தாக்கம்



(நேற்றைய தொடர்ச்சி...)

கொவிகம மற்றும் கராவ சாதியினரிடையே நடக்கப்போகும் ஒரு போட்டி இது என்பதை நன்கு அறிந்து கொண்டே இராமநாதன் போட்டியில் பிரவேசித்தார். வெளிப்படையாக அவரும் இதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை. இந்த மகிழ்ச்சியற்ற போட்டி தமிழர்கள் மற்றும் உயர்மட்ட கராவ சாதியினர் ஆகியோரிடையே ஒரு விரோதத்தை உருவாக்கியது என்பது ஆதாரபூர்வமாகத் தெளிவாகியது.

இந்தத் தேர்தலில் இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட்ட மார்க்கஸ் பெர்னாண்டோ, ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் மைத்துனராக இருந்தார். அருணாசலத்தை நோக்கி ஜேம்ஸ் பீரிஸ் காட்டிய வெளிப்படையான அவமரியாதையின் வேர்கள்தான் பொன்னம்பலம் சகோதரர்கள் கராவ மற்றும் கொவிகம சாதியினரிடையே ஏற்பட்ட சாதி மோதல்களில் கால்பதிக்க காரணமாகியது.

பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் தனது பௌத்த மறுமலர்ச்சியை பரப்புவதற்கு கேணல் ஒல்கொட் போன்ற தகுதிமிக்க ஒரு வெளிநாட்டுத் தலைவரைத் தேடவேண்டியிருந்தது. ஏனெனில் பௌத்த சிங்களத் தலைவர்களால் தங்களிடையே பெருகியுள்ள அளவுக்கதிகமான சாதி வேறுபாடுகளினால் தங்களிடையே ஒரு தலைவரைத் தேர்வு செய்ய முடியவில்லை. அது அவர்கள் மத்தியில் ஒரு உச்ச நிலையை கட்டுப்படுத்தியது. இந்த நிலையைப் பற்றி "கோவிலில் உள்ள கிளர்ச்சி" எனும் தலைப்பில் நான் எழுதிய புத்தகத்தில் விரிவாக ஆய்வு செய்துள்ளேன். இந்த மறுமலர்ச்சியில் அநாகரிக தர்மபாலா ஆற்றியுள்ள பங்கு ஒல்கொட்டுடன் ஒப்பிடும்போது மிகவும் சிறப்பானதாக உள்ளது.

இருப்பினும் தர்மபாலாவினால் கூட சிங்கள பௌத்தரிடையே ஒரு தலைவராக ஒல்கொட் அனுபவித்ததைப்போல கருத்தொருமித்த நிலையை கட்டளையிடவோ ஏற்றுக்கொள்ள வைக்கவோ முடியவில்லை. இன்றுகூட கொவிகம அரசியல்வாதிகளிடையே நாட்டின் தலைமைப் பதவிக்கு கொவிகம சாதிக்கு வெளியேயுள்ள ஒருவர் வரவேண்டும் என்று ஆசைப்படுவது பயனற்றது என்கிற பரந்தளவிலான ஒரு அபிப்பிராயம் இங்கு நிலவுகிறது.

ரணசிங்க பிரேமதாஸ மட்டும்தான் அந்த அபிப்பிராயத்துக்கு எதிராக போட்டியிட்ட ஒருவர். எப்படியாயினும் இரத்தக்கறை படிந்த கிளர்ச்சியொன்று நாட்டில் ஏற்பட்டிருக்காவிட்டால் நாட்டின் தலைவராக வரவேண்டுமென்று அவர் கண்ட கனவு வெறும் கனவாகவே முடிந்திருக்கும் சாதிக் காரணி என்கிற தடையை அவர் தாண்டி வந்திருந்தாலும்கூட அது பிரச்சினைகளை உருவாக்குவதில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு இறுதியில் அவருக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தவும் அவரது வாழ்நாளைச் சுருக்கவும் வழிவகுத்தது.

1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சிக்குப் பின்னர் அரசாங்கம் தடுப்புக் காவலில் உள்ளவர்களது சாதிப் பின்னணியினைப் பற்றி துணிகரமான ஒரு விசேட ஆய்வினை நடத்தியது. கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களில் கொவிகம சாதியை சேர்ந்தவர்கள் இல்லை என்பதை அதன்மூலம் அரசாங்கத்தினால் அறிய முடிந்தது.

இரண்டாவது ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர், இளைஞர்கள் அரசியல் குழப்பம் ஏற்படுத்த வழிவகுத்த சூழ்நிலைகளைக் கண்டறிவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு கூட சாதிக காரணி தெற்கில் ஜே.வி.பி கிளர்ச்சியிலும் அதேபோல வடக்கில் எல.ரீ.ரீ.ஈ.யிலும் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இந்த நெருக்கடிகளின் பின்னாலுள்ள மற்றொரு கொந்தளிப்பான காரணி மதமாகும். மொழியும் மதமும், மதச்சார்பு இயக்கங்களில் இரண்டு பிரதான காரணிகளாக உருவெடுத்தன. 1956இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் அவை முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தின. ஹோவார்ட் றிகிங்கின் கூற்றின்படி, 56 ஆம் ஆண்டுத் தேர்தலகளில் பிரதம மந்திரி சேர்.ஜோன் கொத்தலாவலவின் பௌத்த எதிரபு நிலைக்கு அப்பால், சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்காவின் மனைவியின் மதம் கூட ஒரு சூடான விவாதத் தலைப்புக்கு உள்ளானது.

டி.எஸ்.சேனநாயக்கா மற்றும் அவரது சகோதரர் டி.சி.சேனநாயக்கா ஆகியோர், திருமண பந்தம் காரணமாக டுனவில வளவுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். டுனவில குடும்பத்தினர் பௌத்தர்கள் இல்லை. அவர்கள் கிறிஸ்தவர்கள். இந்தப் பிணைப்பின் காரணமாக கிறிஸ்தவ திருச்சபை டி.எஸ்.சேனநாயக்கா மீது ஆழமான செல்வாக்கைப் பயன்படுத்தியது என்று அவரது விமர்சகர்கள் குற்றம் சுமத்துவதற்கு வகை செய்தது, என்று றிகிங் அவர்கள் உறுதிப்படுத்துகிறார்.

டச்சுக் காலத்தில் பண்டாரநாயக்கா மற்றும் ஜெயவர்தனா ஆகிய இருவரது குடும்ப முன்னோர்களும் டச்சு சீர்திருத்த தேவாலயத்தை பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். பின்னர் பிரித்தானியர் காலத்தில் அவர்களின் வழித்தோன்றல்கள் தங்கள் மதப் பிரிவுகளை மாற்றிக்கொண்டு ஆங்கிலிக்கர்களாக மாறினர். பண்டாரநாயக்கா மற்றும் ஜெயவர்தனா ஆகியோர் காற்றின் திசைக்கு ஏற்ப தங்கள் திட்டத்தை மாற்றிக்கொள்வதில் கவனமாகச் செயற்பட்டு புத்த மதத்திற்கு மாறியதால் அரச அதிகாரத்துக்கு வரும் பாதையில் இருந்த முக்கிய தடையை நீக்கினார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இந்த மதக்காரணி மிகக் கடுமையாகப் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. அதில் உள்ள உண்மை என்னவென்றால் அவரது தந்தையின் சகோதரர் ஒரு கிறிஸ்தவ பிஷப் ஆகவிருந்தது அவரைப் பற்றி பௌத்தர் அல்லாத தோற்றம் ஒன்றைச் சித்தரிப்பதற்கான பிரதான எதிர்க் காரணியாகப் பயன்படுத்தப்பட்டது.

(தொடரும்....)

---

# பிற்பகல்

ஒரு வேலைக்காரச்சிறுமி. அவளுக்கு அரண்மனையிலே அரசருடைய மஞ்சத்தைத் தயார்ப்படுத்துவதுதான் வேலை.

சாதாரண வேலையில்லை. ஹம்சதூளிகா மஞ்சம்! அந்தப் படுக்கையைத் தயார் செய்ய கிட்டத்தட்ட நாலுமணி நேரம் ஆகும். ராஜா தூங்குவதென்றால் சும்மாவா?

முதலில் ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும். அதன் மேலே மெத்தையை விரிக்க வேண்டும். பிறகு அதற்கு மேலே காம்பில்லாத மலர்களைத் தூவவேண்டும்... இப்படி ஏழு அடுக்குகள் உண்டாக்கி அந்தப் படுக்கையைத் தயார் செய்ய வேண்டும்.

வழக்கம்போல அந்த வேலைக்காரச் சிறுமி மஞ்சத்தைத் தயார்ப்படுத்தினாள். வெளியே போயிருந்த ராஜாவும் ராணியும் இன்னும் திரும்பி வரவில்லை. திரும்பி வருவதற்குள் இந்தப் படுக்கையில் ஒரு தடவை படுத்துப் பார்த்தால் என்ன? என்று யோசித்தாள் சிறுமி. ஒரு அஞ்சு நிமிஷம்தானே... என்று எண்ணிக்கொண்டு, அதிலே ஏறிப்படுத்துப் பார்த்தாள். ஆனால் பாவம்! படுத்ததும் சுகமான தூக்கம் வந்து விட்டது. ராஜாவும், ராணியும் வந்து பார்த்தார்கள். ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே கையைத் தட்டி, காவலாளிகளைக் கூப்பிட்டார். வேலைக்காரியை ஒரு தூணிலே கட்டி வைத்துச் சாட்டையாலே அடிக்கும்படி உத்தரவு போட்டார்.



சாட்டையடி விழ, விழ அந்தச் சிறுமி சிரிக்க ஆரம்பித்தாள். சிரிக்கும் அந்தப் பெண் அடி வாங்கிக் கொண்டு, அழாமல் ணைப் பார்த்து ராஜா வுக்கு ஆச்சரியமாகி விட்டது.

"ஏய், எதுக்கு அழாமல் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். "மகாராஜா! உங்கள் படுக்கையிலே நாலுமணிநேரம் படுத்ததுக்கே எனக்கு இத்தனை சவுக்கடி கிடைக்குதே! வாழ்நாள் முழுக்க அந்தப்படுக்கையிலே படுத்த உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கப் போகுதோ... என்று நினைத்தேன்... அதுதான் சிரிபபு வந்து விட்டது" என்றாள் சிறுமி.

## அம்மாவின் ஆட்கள்

# அமைச்சர் வீடுகளில் தேடுதல்

(சென்னை)

2011ஆம் ஆண்டின் கடைசித் தினத்தில் இரு தமிழக அமைச்சர்களில் வீடுகளில் அதிகார பூர்வமற்ற தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. மேலிட உத்தரவுங்க. நீங்க சத்தம் போடாம இருந்தா... உங்களுக்கு நல்லது என்று கூறியபடி புகுந்த இரு வெவ்வேறு அணிகள், இரு அமைச்சர்களில் வீடுகளை அங்குல அங்குலமாகச் சோதனை செய்தன. இந்தத் தேடுதல்கள் தமிழக உளவுத் துறையாலோ அல்லது வேறு அரசு துறைகளாளோ மேற்கொள்ளவில்லை. அதேவேளை, மத்திய அரசுக்கும் இதற்கும் தொடர்பும் இல்லை எனத் தெரியவருகின்றது. தேடுதலுக்குப் சென்ற வேளை இரு அமைச்சர்களில் ஒருவர் வீட்டில்தான் இருந்திருக்கிறார். விடயத்தைச் சொன்னவுடன், அவர் எதிர்ப்பு எதையும் காட்டவில்லை. எதைப் பார்க்க வேண்டுமோ, தாராளமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறியபடி வீட்டையே திறந்து விட்டிருக்கிறார்.

இரண்டாவது அமைச்சரின் சென்னை வீட்டில் தேடுதல் நடந்தபோது, அவர் வீட்டில் இல்லை. சொந்த ஊரில் இருந்தார். சசிகலா குழு வெளியேற்றத்தோடு அவர்களது தொடர்புகளை வெட்டிக்கொண்டு மிக மும்முரமாக அம்மா விசுவாசியாகத் தன்னை விளம்பரம் செய்து கொண்டிருந்த ஆள் இவர்.

## தமிழ்நாட்டிலும் நிலம் அதிர்ந்தது

(தர்மபுரி)

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு நில அதிர்வு ஏற்பட்டது. தர்மபுரி மாவட்டம் பெரியாம்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கடுமையான சத்தத்துடன் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அதிர்ச்சியடைந்த மக்கள் வீட்டை விட்டுத் தெருவுக்கு ஓடினர். ஒரு சில விநாடிகள மட்டும் நீடித்த நில நடுக்கத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

பீதியடைந்த மக்கள் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் நீண்ட நேரம் குழந்தைகள், பெரியவர்களுடன் நடுத் தெருவிலேயே நின்றிருந்தனர்.

இதுபோல வேறு சில இடங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நில நடுக்கம் சேலம் மாவட்ட அலுவலகத்தில் உள்ள நில அதிர்வு மையத்தில் பதிவாகியுள்ளது. இரவு 8.53 மணிக்கு நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது. அதிகாரிகள் கூறுகையில், இந்த அதிர்வால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றனர். இதேவேளை கடலூர் மாவட்டத்திலும், புதுச்சேரியின் பல்வேறு இடங்களிலும் நிலஅதிர்வு ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## புதிய அனல் மின்நிலையம்

(சென்னை)

எண்ணூரில் ரூ.3,600 கோடி மதிப்பீட்டில் 600 மெகாவாட் திறனுள்ள புதிய அனல் மின் நிலையம் அமைக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த அனல் மின் நிலையம் வரும் 2015ஆம் ஆண்டின் இறுதிக்குள் செயற்படத் தொடங்கும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில் மின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு புதிய திட்டங்களைச் செயற்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில், எண்ணூரில் 5 அலகுகள் கொண்ட மொத்தம் 450 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் கடந்த 40 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. இப்போது செயற்பட்டுவரும அனல் மின்நிலையத்துக்கு மாற்றாக புதிய அனல் மின் நிலையத்தை நிறுவ முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.






## கர்நாடகாவில் பாகிஸ்தான் கொடியேற்றம்



(பிஜப்பூர்)

கர்நாடகாவில் தாலுகா அலுவலகத்தில் பாகிஸ்தான் நாட்டு கொடியை மர்ம நபர்கள் ஏற்றினர். இதைக் கண்டித்து பேருந்துகள் மீது கற்கள் வீசப்பட்டன. வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

கர்நாடகாவில் பிஜப் பூர் மாவட்டத்தில் சிந்த்கி நகரில் கடந்த 31 ஆம் திகதி நள்ளிரவு புத்தாண்டுக் கொண்டாட்டம் களை கட்டியது. அதேநேரத்தில் அங்குள்ள தாலுகா அலுவலகத்துக்குள் புகுந்த மர்ம நபர்கள், அங்கிருந்த கொடிக் கம்பத்தில் பாகிஸ்தான் கொடியை ஏற்றியுள்ளனர்.

முதலாம் திகதி அதிகாலையில் அந்த வழியாக சென்றவர்கள் பாகிஸ்தான் கொடி பறப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இந்தத் தகவல் நகரம் முழுவதும் பரவியது. ஆவேசமடைந்தவர்கள் தாலுகா அலுவலகத்துக்கு வந்தனர். பாகிஸ்தான் கொடியை ஏற்றிய மர்ம நபர்களைக் கைது செய்ய வலியுறுத்தி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த வழியாக வந்த பேருந்துகள் மீது கற்கள் வீசப்பட்டன. இதில் 2 பேருந்துகளின் கண்ணாடிகள் உடைந்தன.




## கட்டளைத் தளபதி இல்லாத தேசிய பாதுகாப்புப் படை

(டில்லி)

தேசிய பாதுகாப்புப் படை, கடந்த ஆறு மாதங்களாக தலைமை அதிகாரி இல்லாமல் செயற்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. பயங்கரவாதத் தாககுதல்களைச் சமாளிப்பது, அவர்களுக்கு பதிலடி கொடுப்பது உள்ளிட்ட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில்,



தேசிய பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். வி.வி.ஐ.பி.க்களின் பாதுகாப்புகளையும், இந்தப் படையினர் கவனித்து வருகின்றனர்.

இதன் தலைமை நடவடிக்கை கட்டளை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் ஆர்.எஸ்.பிரதான், பதவி வகித்து வந்தார். அவரது மூன்றாண்டு பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்பே கடந்த ஜூலையில் மீண்டும் இராணுவப் பணிக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இதைத் தொடர்ந்து கடந்த ஆறு மாதங்களாக இந்தப் பதவிக்கு வேறு யாரும் நியமிக்கப் படாமலேயே, தேசிய பாதுகாப்புப் படை செயற்பட்டு வருகிறது. பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் நிலவும் சூழலில், தேசிய பாதுகாப்புப் படைக்குத் தலைமை அதிகாரி இல்லாமல் இருப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள தெரிவித்தன.

## திருவள்ளுவர் சிலை சேதம்



கன்னியாகுமரிக் கடலில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை போதிய பராமரிப்பின்றி உள்ளது. தற்போது சிலையின் பாதத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதை முறையாக பராமரிக்காவிட்டால் சிலை பெயர்ந்து பெரிய விபத்துக்கள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கன்னியாகுமரி கடல் நடுவே 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை 2000ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அப்போதைய முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார்.

திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்ட 12 ஆம் ஆண்டு நிறைவு தினம் நேற்றுமுன்தினம் தமிழ் அமைப்பினரால் கொண்டாடப் பட்டது.

## மாணவர்களின் கற்பனைத் திறனை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்



(ஜெய்ப்பூர்)

மாணவர்களின் கற்பனைத் திறனை வளர்க்கக் கூடிய மனநிலையை உருவாக்குவது ஆசிரியர்களின் கடமை என முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தெரிவித்தார்.

ஜெய்ப்பூரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 19ஆவது தேசிய குழந்தைகள் அறிவியல் கருத்தரங்கில் அவர் இதைத் தெரிவித்தார். புத்தகக் கல்வி மட்டுமில்லாமல் படைப்புத்திறன், கற்பனை வளம், தொடர்ச்சியான கற்றல், விடாமுயற்சி ஆகியவையே சிறந்த சாதனைகளை உருவாக்கத் துணைபுரியும். ஆதலால் ஆசிரியர்கள் மாணவர்களின் மனதில் சிறந்த எண்ணங்களை விதைத்தல் வேண்டும். உலகின் அத்தனை கண்டுபிடிப்புகளுக்கும் அறிவியலே அடிப்படை. மனிதர்களுடைய அறிவுக் கண்ணை திறக்கக் கூடிய தனித்துவம் அறிவியலுக்கு உண்டு. சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே ஆராய்ச்சியாளர்களுடைய தனித்தன்மை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தாண்டில் அமோக விற்பனை

புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ரூ.200 கோடிக்கு மது விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்து சாராயக் கடைகளுக்கு சாராயம் அனுப்பப் பட்டது.

பண்டிகை மற்றும் விசேட காலங்களில் சாராயக் கடைகளில் விற்பனை அதிகரித்து வருகிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின்போது மதுபான விற்பனை உச்சத்தில் இருந்தது. கடந்த 24ஆம் திகதி தமிழகம் முழுவதும் உள்ள சாராயக் கடைகளில் ரூ.52 கோடியே 17 இலட்சத்துக்கு மது விற்பனையாயின. கிறிஸ்மஸ் தினத்தில் ரூ.68 கோடியே 90 இலட்சத்துக்கு விற்பனை நடந்தது. கடந்த 24ஆம் திகதி மாநிலம் முழுவதும் மொத்தம் ஒரு இலட்சத்து 34 ஆயிரம் பெட்டி மதுப் போத்தல்கள் 56 ஆயிரம் பெட்டி பியரும் விற்றுத் தீர்ந்தன. கிறிஸ்மஸ் தினத்தன்று ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பெட்டி மதுப் போத்தல்களும் 93 ஆயிரம் பெட்டி பியரும் விற்பனையானது.

இந்நிலையில், புத்தாண்டு கொண்டாட்டத்தின்போதும் வழக்கத்தைவிட அதிகமாக மது விற்பனை செய்யப்பட்டது. 31 மற்றும் முதலாம் திகதிகளில் மட்டும் ரூ.200 கோடிக்கு மது விற்பனை என்ற இலக்கை சாராயக்கடைகள் நிர்ணயித்தன.

## ஐயப்ப பக்தர்களுக்குச் சோதனை



(சபரிமலை)

தொடர்ந்து 15 மணி நேரம் பெய்த மழையிலும், நனைந்து கொண்டே சபரிமலையில் பக்தர்கள் தரிசனம் செய்தனர். கேரளா பத்தனம்திட்டா மாவட்டம் சபரிமலை ஐய்யப்பன் கோவிலில், தற்போது மகரஜோதி உற்சவம் நடைபெற்று வருகிறது. இதற்காக, பல பகுதிகளில் இருந்தும் பெருமளவு பக்தர்கள் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

புத்தாண்டு தரிசனத்திற்காக வந்திருந்த பக்தர்கள், எதிர்பாராத வகையில் மழையில் மாட்டிக் கொண்டனர். புத்தாண்டு தினத்தில் ஆரம்பித்த மழை 15 மணி நேரம் விடாது பெய்தது.

ஆனால் கொட்டும் மழையை பொருட்படுத்தாமல், பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர். சன்னிதானத்தில் இருந்து சபரி பீடம் வரை பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்றனர்.

பலத்த மழை காரணமாக, சபரி பீடம் அருகே, பெரிய மரமொன்று முறிந்து விழுந்ததால், ஒரு மணி நேரம் பக்தர்கள் செல்வது தடைப் பட்டது.


உலகச் செய்திகள்

# வெடிபொருட்களோடு பிடிபட்டார் அமெரிக்கர்



வெடி பொருட்களை எடுத்துச் செல்ல முற்பட்ட ஒருவர் அமெரிக்காவின் டெக்ஸா' மாநிலத்தின் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். வழமையான சோதனையின் போது குறித்த வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பிரஜையின் பயணப் பொதியிலிருந்து இந்த வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர் தற்போது அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை அமெரிக்கப் படையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

# இவ்வாண்டும் ஐரோப்பிய நாடுகள் நிதி நெருக்கடியை எதிர்நோக்கலாம்




மலர்ந்துள்ள புதிய வருடத்தில் ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்தும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கலாம் என அந்த நாடுகளின் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த ஆண்டில் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரங்கள் மந்தமான வளர்ச்சியை பதிவு செய்யும் என பொருளாதார வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும் கடன் நெருக்கடிகளை கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும் வேலைத்திட்டங்களை ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டுவருகின்றன. எனினும் கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டி இருக்கும் என ஐரோப்பிய தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.


# ஆளுநர் சுட்டுக்கொலை



(பியூனஸ் ஏர்ஸ்)

அர்ஜென்டினாவில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்ற மாகாண ஆளுநர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். லத்தீன் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவின் ரியோநெக்ரோ மாகாணத்தின் ஆளுநராக இருந்தவர் கார்லோஸ் சோரியா (வயது-61) நேற்று முன்தினம் , புத்தாண்டு என்பதால், தனது மனைவி மற்றும் முக்கிய நண்பர்களுடன் தனது வீட்டில் புத்தாண்டினை கொண்டாடினார். இரவு 8. மணியளவில் அவரது படுக்கையறையிலிருந்து துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்கவே , அறையில் சென்று பார்த்த போது அவரது தலையில் குண்டுக்காயங்களுடன் பிணமாக கிடந்தார். இது குறித்து பொலிஸார், கார்லோஸ் சோரியாவின், மனைவி சுஸானா பெர்ரிடோஸிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட ஆளுநர் கார்லோஸ்சோரியா, ஆளும் தேசிய கட்சி சார்பில் கடந்த ஆண்டு (2011) டிசம்பர் 10ஆம் திகதி மாகாண ஆளுநராக தேர்தலில் போட்டியிட்டு பெரும்வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று பதவியை பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டில் மூச்சிரைத்த டுவிட்டர்





(லண்டன்)

அதிகளவில் புத்தாண்டு வாழ்த்துக்கள் குவிந்ததால், பிரிட்டனில் "டுவிட்டர்" சமூக வலைதளம், ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஸ்தம்பித்து விட்டது. இதனால், பயனாளிகள் கடும் எரிச்சல் கொண்டனர். "டுவிட்டர்" சமூக வலைதளம் மூலம் கடந்த 1ஆம் திகதி, உலகம் முழுவதிலும் உள்ளோர், பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர். இந்நிலையில், பிரிட்டனில் மதிய நேரத்தில், "டுவிட்டர்" ஸ்தம்பித்து விட்டது.

அந்த நேரத்தில், ஜப்பானில் புத்தாண்டு ஆரம்பித்ததால், "டுவிட்டரில்" வாழ்த்துக்கள் குவிய ஆரம்பித்து விட்டன. அதாவது, நிமிடத்துக்கு, 16 ஆயிரத்து 197 வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதனால், "டுவிட்டர்" ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஸ்தம்பித்து விட்டது. இதனால், ஏற்கனவே வாழ்த்துத்தெரிவித்து வரும், வாழ்த்து தெரிவிக்கப்பட்டவரும் தங்கள் செய்திகளைக் காண முடியாமல் தவித்தனர். இதன் காரணமாக, பயனாளிகள் கடும் எரிச்சல் அடைந்தனர்.

இதுகுறித்து, அவர்கள் அனுப்பிய செய்திகளில், பல விதமாக கிண்டல் செய்துள்ளனர். அதேநேரம், "பேஸ்புக்" சமூக வலைதளம், புத்தாண்டு தினத்தன்று, 100 கோடி செய்திகள் மற்றும் புகைப்படங்கள் உலகம் முழுவதிலும் பரிமாறப்படும் என்பதால், அதைச் சமாளிக்க முன்பே தயாராக இருந்ததாக அறிவித்திருந்தது.

# கணினி ஊடுருவல்களால் மறைந்திருக்கும் ஆபத்து



சமீப நாட்களில் உலகின் எண்ணை விநியோக நிறுவனங்களின் கணினிகளில் திருட்டுத்தனமாக சிலர் புகுந்து கொள்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள், உலக அளவில் பெரிய அழிவையே ஏற்படுத்தி விடக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று எண்ணெய் விநியோகிக்கும் குழாய்கள் கணினி மூலமே கட்டுப்படுத்தப்படுகின்றன.

உலக பெற்றோலியம் காங்கிரஸின் மாநாடு டோஹாவில் இடம்பெற்ற போது இவ்விடயம் பற்றி பல எண்ணை நிறுவனங்கள் தமது கவலையைப் பகிர்ந்து கொண்டன. எமது கணினியில் யாராவது ஒருவர் புகுந்து, எண்ணெய் செல்லும் குழாய்களை கட்டுப்படுத்த முடிந்தால், அதனால் ஏற்படக்கூடிய பேரழிவு நீங்கள் எந்த திரைப்படத்திலும் பார்த்திராத அளவுக்கு மிகவும் பயங்கரமாக இருக்கும் என பன்னாட்டு எண்ணை ஜயன்டான ஹெல் நிறுவனத்தின் கணினி பராமரிப்பு முகாமையாளர் லுடொல்.·.ப் லுஹ்மன் தெரிவித்தார்.

சமீப நாட்களில் கணினிகளில் ஹக்கர்கள் நுழைவதற்கு எடுக்கும் முயற்சிகள் முன்பைவிட அதிகம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. வர்த்தகப் போட்டி காரணமாகவே எண்ணெய் நிறுவனங்களின் கணினிகளுக்குள் அதிக ஊடுருவல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது. சில பெரிய நிறுவனங்களே, மற்றைய நிறுவனங்களின் கணினிகளுக்குள் புகுந்து வர்த்தக நோக்கங்களுக்காக உளவு பார்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரிய வருகின்றது. இதைத்தவிர சில நாடுகளின் உளவுத்துறைகள் தமது எதிரி நாடுகளின் கணினிகளுக்குள் ஊடுருவி அவற்றினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றன. இதன்மூலம் எதிரி நாட்டில் அழிவை ஏற்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை தொடர்ச்சியாக எண்ணெய் விநியோகம் இடம்பெற வேண்டியிருப்பதால், எந்த கணினியையும் நிறுத்தி வைக்கமுடியாத நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கம்

இந்தோனேஷியாவின் வடபகு தியில் உள்ள சுமத்ரா தீவில் நேற்று அதிகாலை நிலநடுக் கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.3ஆக பதிவானது. சுமத்ரா தீவில் பந்தா அசே பகுதிக்கு தென்மேற்கில் 160 கிலோ மீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் கடற்கரையை ஒட்டியுள்ள கட்டடங்கள் குலுங்கின.

# பதிவிறக்கப் பெட்டகம்

பக்கத்து வீட்டுக்காரர் தன்னுடைய பையனை புகழ்ந்து தட்டிக கொடுத்து உற்சாகத்தோடு இருப்பதைப் பார்த்தவர், "என்ன நடநதது? அதிக சந்தோஷமாக இருக்கிறீர்களே?" என்று கேட்டார்.

பக்கத்துவீட்டுக்காரர் சொன்னார், "என்னுடைய பையன் புத்திசாலியாக மாறிவருகிறான். ஐந்தும் ஐந்தும் எவ்வளவு என்று கேட்டேன். எட்டு என்று சொல்கிறான்."

"இது தவறான விடையல்லவா?" என்று கேட்டார் வந்தவர்.

"ஆமாம். எனக்கும் தெரியும். ஆனால்நேற்று இதே கேள்வியை கேட்டதற்கு ஆறு என்று சொன்னான். இன்று கொஞ்சம் முன்னேறியிருக்கிறான் அல்லவா?" என்று பதில் சொன்னார் பக்கத்து வீட்டுக்காரர்.

*** *** ***

இரண்டாம் வகுப்பு படிக்கும் பெண் வீட்டிற்கு வந்ததும் அம்மாவிடம் சொன்னாள்: "அம்மா! இன்றைக்கு நாங்கள் எல்லோரும் குழந்தைகள் எப்படி உருவாக்குவது என்று தெரிந்து கொண்டோம்." அதிர்ச்சியடைந்த அம்மா, அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல், "நல்ல விஷயம்தான். எப்படி உருவாக்குகிறார்கள்?" என்று கேட்டாள். "ரொம்ப சுலபம் அம்மா. குழந்தை என்று சொல்லுகிறோம் அல்லவா? கூடவே 'கள்' என்று சேர்த்துக்கொண்டால் போதும். குழந்தைகள் ஆகிவிடும்" என்று சொன்னாள் சிறுமி.

*** *** ***

வயதான இரண்டு தம்பதியர் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து, "பிரெட், கடந்த மாதம் நீங்கள் ஞாபக மறதிக்காக சிகிச்சை பெற்றீர்களே, எப்படியிருந்தது?" என்று கேட்டார். "மிகப் பிரமாதம்!" என்ற ப்ரெட் மேலும் சொன்னார். "மனோதத்துவத்தில் நவீன பயிற்சிகளை எனக்களித்தது வித்தியாசமாக இருந்தது."

"அப்படியா அந்த மருத்துவமனையின் பெயர் என்ன?"

எவ்வளவு முயற்சித்தும் ப்ரெட்டிற்கு மருத்துவமனையின் பெயர் நினைவுக்கு வரவில்லை. பின்னர் தயக்கத்துடன் அவரைப் பார்த்து ப்ரெட் கேட்டார். "நீளமான காம்புடன் முள்ளுடன் மலர் இருக்குமே, அதன் பெயர் என்ன?"

"ரோஸ்" என்றார் அவர். "ஆமாம். அதுதான்" என்று சொன்ன ப்ரெட் அவரது மனைவி பக்கம் திரும்பி, "ரோஸ்! அந்த மருத்துவமனையின் பெயர் என்ன?" என்றார்.

*** *** ***

ரொம் மற்றும் ஹரி இருவரும் சுரங்க நிறுவனமொன்றில் வேலைக்கான நேர்காணலுக்குச் சென்றிருந்தனர். காத்திருப்பு அறையில் காத்திருந்தபோது ஹரியை முதலில் கூப்பிட்டனர். சுரங்க தலைமையதிகாரி ஹரியைப் பார்த்து கேட்டார், "இதற்கு முன்பு பூமிக்கு அடியில் ஏதாவது சுரங்கத்தில் பணியாற்றியிருக்கிறீர்களா?" "ஆமாம்" என்றான் ஹரி. "எவ்வளவு ஆழம் வரை சென்றிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் அதிகாரி. "எட்டு அல்லது பத்தடி வரை" என்றான் ஹரி. "சுரங்கம் என்றால மிகவும் ஆழமானது. நீ சொல்லும் ஆழத்தைப் பார்த்தால் இதுவரை சுரங்க வேலைக்கே சென்றதில்லை என்று நினைககிறேன். நீ போகலாம்" என்று அனுப்பிவிட்டார்.

வெளியே வந்த ஹரி, ரொம்மைப் பார்த்து, "உள்ளே அவர்கள கேட்பதைப் பார்த்தால் ரொம்பவும் ஆழம் வரை சென்று வேலை பார்த்ததாக சொன்னால்தான் வேலை கிடைக்கும்போல் தோன்றுகிறது. அதற்குத் தகுந்தாற்போல் பதில் சொல்" என்று கூறிச் சென்றான்.

ரொம் உள்ளே சென்றவுடன் ஹரியிடம் கேட்கப்பட்ட அதே கேளவியைக் கேட்டார் அதிகாரி, "நிறைய அனுபவம் இருக்கிறது. 20 ஆயிரம் அடி வரை பூமிக்கடியில் சென்றிருக்கிறேன்" என்று சொன்னான் ரொம். "20 ஆயிரம் அடியா? வாவ்! இது மிகப் பெரிய விஷயம்தான்" என்று ஆச்சரியப்பட்ட அதிகாரி கேட்டார், "அவ்வளவு ஆழம் செல்லும்போது எந்தவிதமான விளக்கைப் பயன்படுத்துவாய்?"

"விளக்கா? நான் அதெல்லாம் பயன்படுத்தியதே கிடையாது. ஏனெனில் நான் வேலை பார்த்தது பகல் ஷிப்ட்டில் தானே" என்றான் ரொம்!

*** *** ***

இரண்டு சர்தார்ஜிகள் லண்டன் நகருக்கு சென்றனர். அங்கு ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டி பேருந்துக்காக நின்றனர். அப்பொழுது இரண்டு அடுக்கு மாடி பஸ் ஒன்று வந்தது. ஒரு சர்தார்ஜி கீழேயும், ஒரு சர்தார்ஜி பேருந்தின் மேல்புறத்திலும் தனித்தனியாக பயணம் செய்தனர். மேலே இருந்தவர் பயந்து கொண்டே கம்பியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். கீழே இருந்த நபர், ஏன் பயந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு இந்த சர்தார்ஜி, உனக்காவது பரவாயில்லை கீழே டிரைவர் இருக்கிறார். மேலே யாருமே இல்லை. தானாக வண்டி ஓடியது என்றார்.

# மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பெற கூட்டு முயற்சியும் விட்டுக் கொடுப்பும் தேவை

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக கூட்டமைப்புக்கும் இடையில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் போது, இடையிடையே தடங்கல்களும முறிவுகளும் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதுதவிர, கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைக்குப் புறம்பாக, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை இந்தப் பிரச்சினையில் ஒரு கருத்தொருமைப்பாட்டுக்குக் கொண்டு வரும் முகமாக அரசாங்கம் அமைக்க உத்தேசித்துள்ள 'பாராளுமன்ற தெரிவுக் குழு'விலும் தமிழ் கூட்டமைப்பு பங்குபற்ற மறுப்புத் தெரிவித்துள்ளது. இவை நல்ல சகுனங்கள் அல்ல.

தமிழ் கூட்டமைப்பு அரசுடன் முரணபடுவதற்கு பிரதான காரணங்களாக இருப்பவை, அது முன்வைத்துள்ள முக்கிய மூன்று விடயங்களாகும். அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட வேண்டும். மாகாணசபைகளுக்கு காணி அதிகாரம் வேண்டும். மாகாணசபைகளுக்கென தனியான பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்பவையாகும்.

இவைபற்றி கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, இந்த மூன்று கோரிக்கைகளையும் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் வேறு விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு கூட்டமைப்பு முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் கூட்டமைப்பினரின் மூன்று கோரிக்கைகளில் உள்ள நியாயம் அல்லது சாத்தியம் பற்றிப் பார்ப்பதற்கு முன்னால், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் வேண்டுகோளை எடுத்து நோக்கினால், அவர் இந்தக் கோரிக்கைளையே நிராகரிக்கும் நிலையில், அரசாங்கமும் ஜனாதிபதியும் கூறிவரும் '13ஆவது திருத்தச்சட்டத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காண்போம்' என்று கூறி வருவதின் அர்த்தம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில் கூட்டமைப்பினரின் கடந்த கால மோசடி அரசியல் வரலாறு ஒரு பக்கம் இருப்பினும், அவர்கள் இப்பொழுது கோருவது ஒன்றும் புதியவை அல்ல. அவை ஏற்கெனவே நடைமுறையில் இருந்தவையும் (வடக்கு கிழக்கு இணைப்பு), 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு குறித்தொதுக்கப்பட்டவையுமாகும். எனவே கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை ஒரேயடியாக நடைமுறைப்படுத்துவது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமா என்பது ஒருபுறமிருக்க, கொள்கையளவிலாவது அந்தக் கோரிக்கைகளை அரசு ஏற்க வேண்டும் அல்லது நிராகரிக்காமல் தன்னும் இருக்க வேண்டும்.

மறுபக்கத்தில், தமிழர் தரப்பில் கடந்த சில வருடங்களாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட புலிகளும் சரி, இப்போதைய தமிழ் கூட்டமைப்பும் சரி பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முனனெடுத்துச் செல்வதற்கான ஆக்கபூர்மான பங்களிப்பை எப்பொழுதும் வழங்கியதில்லை. கடந்தகால அரசாங்கங்கள் தவிர்க்க முடியாமல் சில விடயங்களில் இறங்கி வந்த நேரங்களில் எல்லாம், அதைப் பயன்படுத்தி சில விடயங்களைத் தன்னும் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக புதிய புதிய நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைத்துப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவது தமிழர் தரப்பில் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.

தற்போதைய மூன்று கோரிக்கைகளைப் பொறுத்த வரையிலும்கூட அது தான் நிலைமை. வடக்கு கிழக்கு இணைப்பைப் பொறுத்தவரையில் அது முன்னர் தற்காலிகமாகவே இணைக்கப்பட்டிருந்தது என்பதை கூட்டமைப்பினர் மறந்து விடுகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணசபையை சிங்கள இனவாத ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுடன் சேர்ந்து புலிகள் கலைக்காமல் இருந்திருந்தால், சில வேளைகளில் மக்கள் கருத்துக் கணிப்பில் வெற்றி பெற்று அது நிரந்தரமாக இணைக்கப்பட்டிருப்பதுடன், தமிழ் மக்களின் வேறு பல பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும் என்பதை புலிகளை ஏகப்பிரதிநிகளாக ஏற்றிருந்த தமிழ் கூட்டமைப்பினர் இந்த சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்ப்பது அவசியம்.

இன்று வடக்கு கிழக்கு இணைப்பு என்பது சட்டரீதியான அந்தஸ்தை இழந்துள்ளதுடன், அரசியல் ரீதியாகவும் அது பொருத்தமில்லாததும் நடைமுறைச் சாத்தியமில்லாததுமாகும். ஏனெனில் கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையை எடுத்துக் கொண்டால் சிங்கள - முஸ்லீம மக்கள் மூன்றில் இரண்டு பங்கினராகவும், தமிழ் மக்கள் மூன்றிலொரு பகுதியினராகவுமே இருக்கின்றனர். அங்கு வாழும் சிங்கள - முஸ்லீம் மக்கள் வ்டக்கு கிழக்கு இணைப்பை முற்றாக எதிர்ப்பதுடன், அங்குள்ள தமிழ் மக்களிலும் கணிசமான ஒரு பிரிவினர் இணைப்பை விரும்பவில்லை.

எனவே கிழக்கின் பெரும்பான்மையான மக்களின் விருப்பமின்றி வடக்குடன் கிழக்கை பலவந்தமாக இணைப்பது என்பது, ஆக்கிரமிப்புக்கு ஒப்பான செயலாகும். வேண்டுமானால் கிழக்கு மாகாண மக்கள் வடக்குடன் சேர்ந்து வாழ விரும்புகிறார்களா என, ஒரு கருத்துக்கணிப்பை அந்த மாகாண மக்களிடம் நடாத்தி முடிவெடுக்கும்படி தமிழ் கூட்டமைப்பு அரசிடம் கோரினால் அது ஜனநாயகமாகும்.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை, ஒன்றிணைந்த இலங்கை பொலிஸ் சேவையின் கீழ் முதலில் மாகாண பிரதி பொலிஸ் ம்ா அதிபரின் கீழ் தமிழ் தெரிந்த பொலிஸாரை கூடுதலாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நியமிக்கும் ஏற்பாட்டை செய்து, பின்னர் அதிலிருந்து படிப்படியாக தனி பொலிஸ் சேவையை நோக்கி முன்னேறலாம்.

காணி அதிகாரம் என்பது மாகாண சபைகளைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான விடயமாகும். தனது மாகாண மக்களின் காணித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், மாகாணசபைகளின் நிர்வாகச்செயற்பாடுகளுக்கும் காணி அதிகாரம் நிச்சயம் தேவை. அதை எடுத்த எடுப்பிலேயே அரசாங்கம் நிராகரிப்பது தவறாகும். மாகாணங்களில் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் சில காணிகளின் தேவை இருப்பதால், மத்திய - மாகாண அரசுகளின் கூட்டு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலம் இப்பிரச்சினையைக் கையாளலாம்.

இவைதான் நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளாக இருக்க முடியும் என்பதைத் தமிழ் கூட்டமைப்பு உணர வேண்டும். இடுப்பில் துணி எதுவும் இல்லாமல் நிர்வாணமாக நிற்பவன் கோவணம் தன்னும் கிடைத்தால முதலில் அதைத்தன்னும் பெற்று மானத்தைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். கூட்டமைப்பினரோ ஒரு நாலுமுழ வேட்டி கிடைப்பதைக்கூட நிராகரித்து, எடுத்த எடுப்பிலேயே பட்டு வேட்டி தான் வேண்டுமென அடம் பிடிப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது.

இன்னொன்றையும் கூட்டமைப்பினர் கவனிக்க வேண்டும். மாகாண சபை என்பது வடக்கு கிழக்கில் மட்டும் உள்ள ஒருமுறை அல்ல. அது இலங்கையின் 9 மாகாணங்களிலும் உள்ள ஒன்றாகும். ஏனைய மாகாணதவர்களுக்கும் காணி அதிகாரங்கள் போன்றவை தேவை.

எனவே அவர்களையும் ஒன்றிணைத்து கோரிக்கை வைக்கக்கூடிய சாத்தியமான விடயங்களில் அவர்களையும் அணுக வேண்டும். அப்படி அணுகினால் அவர்கள் நிச்சயம் ஒத்துழைப்பார்கள். அதைவிடுத்து கூட்டமைப்பினர் பிரிவினை கோருகிறார்கள் என்ற ஐயப்பாட்டை விதைக்கும் வகையில் கோரிக்கைகளை முன்வைத்தால் எதிர் விளைவுகள்தான் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசைப் பொறுத்தவரையிலும்கூட அது பொறுப்புணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் செயற்படுவது அவசியம். ஏனெனில் இலங்கையில் தமிழர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டு, பின்னர் சமஸ்டி கேட்டு, அதன்பின்னர் தனிநாடு கேட்டு, அதற்காக அதற்காக ஆயுதம் தாங்கிப் போராடி, தோற்கடிக்கப்பட்ட பின்னர் இப்பொழுது ஐக்கிய இலங்கைக்குள் மாகாண மட்டத்தில் அதிகாரம் பெறும் குறைந்தளவான அதிகாரப் பகிர்வு முறைக்கு முன்வந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நீடித்ததானதுமான தீர்வொன்றைக் காண அரசு முன்வர வேண்டும்.

அதைவிடுத்து பாசிசப் புலிகள் தோறகடிக்கப்பட்டதைத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தோற்கடித்ததாக அரசு கருதுமானால், மீண்டும் விரும்பத்தகாத நிலைதான் நாட்டில் ஏற்படும். இந்த விடயத்தில் அரசின் பக்கம்தான் பந்து இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இடித்துரைக்க விரும்புகிறோம்.

*நன்றி: வானவில் இதழ் 12 -2011*

# பின்னால் திரும்பிப் பார்ப்பதன் முக்கியத்துவம்

*- விக்டர் ஐவன் கட்டுரையிலிருந்து*



இறுதியில் ஈழத்தை கட்டியெழுப்பும் கனவை நனவாக்கும் உரிமையை பிரபாகரன் ஏற்றுக்கொண்டார். அந் நோக்கத்தை வெற்றி கொள்வதற்காக நடைபெற்ற போராட்டம் பொதுவாக நாட்டுக்கு மட்டுமின்றி தமிழ் மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அவர் ஈழப் போராட்டத்திலிருந்த எதிர்த தரப்பினரின் செயற்பாட்டை அதன் தலைவர்களையும்' செயற்பாட்டாளர்களையும் ஆயிரக்கணக்கில் கொன்றொழித்தார்.

அத்துடன் அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் கொலை செய்தார்.

எனது கருத்தின்படி பிரபாகரனின் இயற்கை தவறுகளால் கொலையுண்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை அரச படையினரால் கொலையுண்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

இறுதியில் அவர் தமிழ் மக்களின் புத்திஜீவிகள் பலரைக் கொலை செய்தார்.

பிரபாகரன் தமது மக்களுக்கு எதிராக பின்பற்றிய அதே பாதிப்பான நடவடிக்கைகளை தற்போதைய தமிழ் மக்களின் வழிகாட்டுபவர்களாக முயற்சிக்கும் குழுவினர் அதற்காக வெளியிட்டிருக்கும் பகிரங்க கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ள எந்தவொருநபரும் பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட பிழைகளைத் திருத்த எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. அல்லாது போனால் அவர்கள் மௌனமாக இருந்தனர். அல்லாது போனால் பிரபாகரனின் அழிவு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்துள்ளனர்.

மோசமான தவறுகள் இடம்பெற்றிருந்த சந்தர்ப்பததிலும் கூட பாதிப்பு ஏற்பட்ட தரத்தில் எந்தவொரு குழுவினருக்கும் எதிர்த்தரப்பு மக்களுக்கு மேலதிகமாக தமது மக்களை கொலை செய்யும் உரிமை இல்லை. அமெரிக்காவின் கறுப்பினத்தவர்களுக்கு இலங்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இந்நிலையை விட அதிகமான அநீதிகள் இடம்பெற்றன. அமைதியான போராட்டத்துக்கு பதிலாக ஆயுதப் போராட்டம குறித்துப் பேசும் சிலர் கறுப்பினத்தவர்களுள் இருந்த போதும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படவில்லை. அமெரிக்க கறுப்பினத்தவர்களின் முக்கிய தலைவரான மார்ட்டின் லூதர் கிங் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னரும் கூட அவர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்படவில்லை. அவர்கள் அமைதிப்போராட்டத்தின் மூலம் அவர்களுக்குத் தேவையான உரிமைகளை வென்றெடுத்தனர். முதன்முதலில் அமைதிப்போராட்டத்தை மேற்கொண்டவர்களை அதே வழியில் செல்ல நாம் இடமளிக்காததால் எமக்கு ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டதாக சில தமிழ் தலைவர்கள் கூறுவதையும் அர்த்தமற்ற கருத்தாகவே கொள்ள வேண்டியுள்ளது. அக்காலத்தில் அவர்கள் மேற்கொண்ட அமைதிவழி அஹிம்சைப் போராட்டங்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்றது உண்மை. இருந்தும் அக்காலத்தில் அமைதிப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் எவரும் கொல்லப்படவில்லை. 1961இல் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட சட்டமறுப்பு நடவடிக்கைகளில், அந்நடவடிக்கை தொடர்ந்து 54 நாட்கள் மேற்கொண்ட பின்னர் செல்வநாயகம் 'உட்பட அந்த நடவடிக்கையில் ஈடுபட்ட 51 பேர் கைது செய்யப்பட்டு 170 நாட்கள் பனாகொட இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். அத்துடன் அமைதிவழி போராட்டங்களுக்கு இலங்கையில் இடமில்லை என்ற எண்ணத்தை அவர்கள் ஏற்படுத்திக்கொண்டனர்.

காந்தி உட்பட இந்திய காங்கிரஸின் தலைவர்கள் கைதான முதல் சந்தர்ப்பத்தில் அஹிம்சைப் போராட்டத்துக்கு இடமில்லை என்று எண்ணத் தலைப்படவில்லை. எவ்வளவு முறை கைது செய்யப்பட்ட போதும் அவர்கள் தமது அஹிம்சை வழிப் போராட்டத்தை கைவிடவில்லை.

காந்தியுட்பட இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கிருந்த நேர்மையும் மனத் தைரியம் இலங்கைத் தமிழ் தலைவர்களுக்கு இருந்திருந்தால் பெரிய அழிவுகளை தவிர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்திருக்க முடியும்.

தமிழ் தலைவர்களைப் போலவே தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகளுக்குப்பின்னர் வளமான எதிர்காலத்துக்கு தேவையான யதார்த்தமான நோக்கை தோல்வியுற்ற தமிழ் போராட்டம் தொடர்பான சுய விமர்சனத்தை மேற்கொண்ட பின்னர் மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்கள் வீசும் எலும்புத்துண்டுகளைப் பொறுக்கும் நிலைக்கு தள்ளப்படக்கூடாது. கௌரவத்துடன் வாழும் நிலையை அவர்கள் வென்றெடுக்க வேண்டும். இருந்தும் எந்தவொரு உரிமைப போராட்டத்துக்காகவும் சயான நோக்கு இருக்கவேண்டும்.

இலங்கையைப் போலவே அண்டைய நாடான இந்தியாவும் தேசிய இராச்சியங்களாக ஜனநாயக அரசமுறை பிரிட்டனிடமிருந்தே கிடைத்தன. இந்திய சுதந்திரத்துக்கு பின்னர் தேசிய அரச முறையைப் பாதுகாத்துக் கொண்டு ஜனநாயக நிர்வாக முறையை மிகச் சாதகமான முறையில் முன்னெடுக்கும் சந்தர்ப்பம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. (06ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் தளராது தொடரும் சமூக சேவைகள்

(தொண்டமானாறு)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் மத வேறுபாடு இன்றி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரம், கல்வித் துறை போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட சேவைகளை நாம் செய்து வருகின்றோம் என்று சந்நிதியான் ஆச்சிரம மடாதிபதி செ. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அந்தந்த கிராம சேவகர்களின் சிபார்சின் பேரில் ஒவ்வொரு மாதமும் 13 குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதேநேரம் வறுமையில் வாழ்ந்து படித்ததினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள் அங்கவீனமுற்று இருந்தால் அவர்களுக்கு சக்கரநாற்காலிகளும் ஊன்றுகோலும் வழங்கப்பட்டு வருகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வேலையற்று இருக்கும் யுவதிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான தொழில் வழிகாட்டல்களும் எமது பேரவையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை அதிபர்களின் சிபார்சுக்கு இணங்க அம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மாதாந்த உதவித் தொகையும், சுலபமாக சென்று கல்வி கற்பதற்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றுக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் துறை மற்றும் வசதிக்கு ஏற்ற வகையில் உதவித் தொகையும், நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், சந்நிதியான் ஆச்சிரமத்தினால் இலவச வைத்திய சேவை கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நோயாளர்களுக்கு மருந்து வகைகள், ஆலோசனைகள் ஒவ்வொரு புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 5.00 மணி வரை பிரபல வைத்தியர்கள் இருவரினால் வழங்கப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்தார். (116)

# வடமாகாண அபிவிருத்தியில் கல்விக்கே அதிக முன்னுரிமை

## ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் 2012ஆம் ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் கல்வி அபிவிருத்திக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

கல்வி அபிவிருத்தியோடு சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கென அரசாங்கம் 2896 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான ஆவணங்களில் நேற்றையதினம் வட மாகாண ஆளுநர் கையெழுத்திடும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது.

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2896 மில்லியன் ரூபா நிதி வட மாகாண சபையின் கீழுள்ள 5 அமைச்சுகளுக்கும் அதன் கீழ் இயங்கும் 24 திணைக்களங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வடமாகாண சபை, மாவட்ட செயலாளர்களுக்கான நிதி ஒதுக்கீடு, உள்நாட்டு, வெளிநாட்டு நிதி உதவிகள் மூலமும் வடக்கில் பல்வேறு பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நிதி ஒதுக்கீட்டு ஆவணங்களில் கையெழுத்திடும் நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டதுடன் புது வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் வகையில் ஆளுநர் முன்னிலையில் சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டனர்.

# பணமோசடியில்....

நீர்கொழும்பில் வசித்து வரும் குறித்த போலி முகவர் அறிமுகமானார். இவர் ஊடாகப் பெற்றோர் தமது மகனைக் கனடாவுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியை மேற்கொண்டனர்.

அதற்கு குறித்த முகவர் 46 இலட்சம் ரூபா செலவுடன் கனடாவுக்கு இளைஞரை அனுப்பி வைப்பதாக ஒப்பந்தம் செய்திருக்கின்றார்.

அதற்கு முன்பாக 3 இலட்சம் ரூபா தரும்படியும் இளைஞர் கனடா சென்றதும் மிகுதியைத் தருமாறும் கோரியுள்ளார். இதனை ஏற்றுக்கொண்ட பெற்றோர் ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள வங்கியொன்றின் மூலமாக 3 இலட்சம் ரூபாவினை அனுப்பி வைத்தனர்.

நாட்கள் நகர கொழும்பு, யாழ்ப்பாணம் என மாறி சுமார் இருபதுக்கு மேற்பட்ட பயணங்கள் சென்று வந்தும் பயண ஒழுங்கு சரிவரவில்லை. இதனிடையே மேலும் 46 ஆயிரம் ரூபாவைத் தருமாறு முகவர் கேட்கவே அதனையும் நேரடியாக வழங்கியிருக்கின்றனர். நிலைமை இவ்வாறு இருக்கையில் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் 20 நாட்கள் விசா அனுமதியுடன் குறித்த இளைஞரை அனுப்பி வைக்கும் முயற்சியில் குறித்த முகவர் ஈடுபட்டார் இதனை அறிந்த பெற்றோர் தமது மகனை கனடாவிற்கு அனுப்புவதாக ஏமாற்ற வேண்டாம் தாம் கொடுத்த பணத்தையும் இரண்டு பாஸ்போட்டையும் பெற்றுத் தருமாறும் கோரி யாழ்.பொலிஸாரிடம் முறையிட்டிருந்தனர். இதன் அடிப்படையிலேயே குறித்த போலி முகவர் யாழ்.பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு விசாரணையை எதிர்நோக்கியுள்ளனர்.

# மரத்திலிருந்து வீழ்ந்த சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

மரத்தில் இருந்து விழுந்து காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டு சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம்சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நிதூர்சன் (வயது-14) என்பவரே வலது கை உடைந்த நிலையில் காயமடைந்துள்ளார்.

யூனியன் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் இவர் மாலை தனது வீட்டிலுள்ள கால் நடைகளுக்கு தேவையான குழைகளை வெட்டுவதற்கு மரத்தில் ஏறியவேளை சறுக்கி விழுந்து காயமடைந்தார். (எப்.எஸ்)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நல்லூர் பிரதேசத்தில் வெற்றி

(திருநெல்வேலி)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பெருமளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு இப்பகுதியில் 194 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் திருநெல்வேலியில் இரண்டு பேரும், கொக்குவிலில் ஒருவரும், கோண்டாவிலில் ஒருவருமாக நான்கு பேர் இந்நோயின் தாக்கங்களுக்கு உள்ளாகி மரணமடைந்தனர். ஆனால் 2011ஆம் ஆண்டு இப்பகுதியில் பதினொரு பேர் மட்டுமே டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டது தெரிய வந்தது. இறப்பு எதுவும் இடம்பெறவில்லை.

நல்லூர் சுகாதார அதிகாரி பணிமனை இப்பகுதியில் நடாத்திய பல தெங்கு ஒழிப்பு கருத்தரங்குகள், கண்காட்சிகள், விழிப்புணர்வுகளோடு கோப்பாய் பொலிஸாருடன் இணைந்து டெங்கு நுளம்பு வருவதற்காக சூழலை வைத்திருந்தவர்கள் மீது நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதும் டெங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதற்கான காரணம் என நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (137)

# இந்தியா...

விரும்புகின்றது. இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும்.

நான் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கைக்குச் செல்லும் போது, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். எமது அயல்நாடுகளுடன் இரு தரப்பு உறவுகளைப் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தியா கரிசனை கொண்டிருக்கிறது

இலங்கை மூன்றாவது நாடு ஒன்றுடன் கொண்டிருக்கும் உறவுகள் கவலையளிக்கக் கூடியவை தான். ஆனால் இந்தியாவின் நலன்களை இலங்கை மீது திணிக்க முடியாது. எமது அயல் நாடுகள் ஏனைய நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளை இந்தியா மதிக்கின்றது

ஆனால் இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளை நல்லெண்ணம் மற்றும் வெளி விவகார உறவுகளின் அடிப்படையில் வைத்துக் கொள்வதற்கு விரும்புகிறோம் என அமைச்சர் கிருஷ்ணா மேலும் தெரிவித்துள்ளார்.

# காணி, பொலிஸ்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும். காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்காவிடின் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என்று கூறி விலகிச் செல்வதால் ஏற்படப் போவது ஒன்றுமில்லை.

குறித்த அதிகாரங்களின் சில விடயங்கள் குறித்து பேச அரசாங்கத்தின் கதவுகள் திறந்தேயுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அத்துமீறிய...

கடற்பரப்பில் பெருமளவு உள்ளூர் மீனவர்களது வலைகள் வெட்டியும், சேதப்படுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த காத்திரமான நடவடிக்கை எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (பா)

# பேச்சின்...

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்ற எமது கோரிக்கைக்கு இராஜதந்திர சமூகத்தின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கான பரப்புரைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அவர்களின் சொந்த தொகுதிகளில் இருக்கின்றனர்.

அவர்கள் அனைவரும் கொழும்பு திரும்பியதும் கூடி ஆராய்ந்து இராஜதந்திர சமூகத்தை சந்திப்பது என்று முடிவு செய்யப்படும் என்றும் சுரேஷ்பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

# வட,கிழக்கு...

வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு நன்மைகள் கிடைக்கப் போவதில்லை.

எனவே இந்த யோசனைத் திட்டத்திற்கு தாமும், தமது கட்சியும் எதிர்ப்பை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




# ஐந்து நாள்...

அனுமதிக்கப்பட்டார். இருந்தும் அம்மாணவன் நேற்றுக் காலை 7.00 மணியளவில் சிகிச்சை பயனின்றி மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தனர். (பா)

# அமெரிக்காவுடனான வர்த்தக உறவு இவ்வருடம் மேலும் அதிகரிக்கும்



(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் இவ்வருடத்தில் மேலும் விரிவடையும். அமெரிக்காவின் பொருளாதார நிலை வலுப்பெற்று வருவதாலும், இருநாடுகளிடையேயும் புதிய வர்த்தக வாய்ப்புகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் இந்த வர்த்தக உறவு வளர்ச்சியடைய வாய்ப்புகள் காணப்படுவதாக அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் விஜய ரத்நாயக்க தெரிவித்தார்.


இலங்கையிலிருந்து ஆடைகள், இறப்பர், பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்கள், தேயிலை, கோப்பி, வாசனைத் திரவியங்கள், இரசாயனப் பதார்த்தங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் போன்றன ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தன.

விமானங்கள், விமான உதிரிப்பாகங்கள், சீரியல் வகைகள், இயந்திரங்கள், பருத்தி துணி வகைகள், கடதாசி மற்றும் கடதாசி அட்டைகள் மற்றும் பெப்ரிக் துணி வகைகள் போன்றன இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

இலங்கையின் ஆடை உற்பத்திகளின் ஏற்றுமதிக்கான இரண்டாவது மிகப்பெரிய நாடாக அமெரிக்கா திகழ்வதுடன், இது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் 40 வீதமான ஆடைகளை இறக்குமதி செய்கின்றதென அவர் மேலும் தெரிவித்தார்.

# அபிவிருத்தித் திட்டங்களில் பங்கெடுத்து 3.7 பில்லியன் இராணுவத்தால் சேமிப்பு

## தளபதி ஜகத் ஜயசூரிய பெருமிதம்



(கொழும்பு)

அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பங்களிப்புச் செய்து, 3.7 பில்லியன் ரூபாவினை படையினர் சேமித்துக் கொடுத்துள்ளதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் புத்தாண்டு தினத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வீதிகள், சர்வதேச மைதானங்கள், பூங்காக்கள் போன்றவற்றை நிர்மாணிக்கும் பணிகளும், நகரை அழகுபடுத்தும் நடவடிக்கைகளிலும் படையினர் சிறந்த பங்களிப்பை வழங்கி வருவதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கல்வி, விவசாயம், பொருளாதாரம், சுயதொழில் முயற்சிகளுக்கு படையினர் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உதவி வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாணவர் சங்கம் மீதான தடைகள் நீக்கப்பட்டன

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக சகல மாணவ சங்கம் மீதும் தற்காலிகமாக விதிக்கப்பட்டிருந்த தடைகள் அதன் நிர்வாக சபையினரால் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பேராதனை பல்கலைகழக பொது மாணவ சங்கத் தலைவர் மஹேஸ் பிரபாஸ்வர லங்கா தெரிவித்தார்.

இந்தநிலையில், இரண்டு நிபந்தனைகளுக்கு அமைய இந்தத் தடை விலக்கிக் கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் உயிருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை, பல்கலைகழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படாமை ஆகியவையே விதிக்கப்பட்ட நிபந்தனைகள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொன்சேகாவிற்கான பொதுமன்னிப்பு குடும்ப உறுப்பினர்களே கேட்க வேண்டும்

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக அவரது குடும்ப உறுப்பினர்களைத் தவிர வெளி நபர்கள் விடுக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் ஜயலத் ஜயவர்தனவிடம் ஜனாதிபதி இதனை நேற்றுமுன்தினம் கூறியுள்ளார். 2012 ஆம் ஆண்டு புதுவருடத்திற்காக ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில், ஜயலத் ஜயவர்தன தொலைபேசி மூலம் ஜனாதிபதியுடன் உரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்த பின்னர், சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஜயலத். ஜனாதிபதியிடம் வினவியுள்ளார். இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, பொன்சேக்காவின் குடும்பத்தினரை தவிர, நாடாளுமன்ற உறுப்பினர் போன்று வேறு நபர்கள் விடுக்கும் கோரிக்கைகளில் எந்தப் பயனும் இல்லை என தெரிவித்துள்ளார்.



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. இது தொடர்பாகவே தாம் ஜனாதிபதியிடம் வினவியதாக ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

# சுற்றுலா வந்த வேளை ஹற்றன் வாசி மரணம்

(யாழ்ப்பாணம்)

உறவினரை பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. ஹற்றன் சாம்பல் டிவிசன் பகுதியைச் சேர்ந்த சின்னையா மருதை (வயது - 68) என்பவரே உயிரிழந்தவராவார்.

இறந்த நபர் சுதுமலையிலுள்ள தனது உறவினரை பார்ப்பதற்காக வந்த வேளை திடீரென சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எப்.எஸ்)

# அலுகோசு பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவும் அலுகோசு (தூக்கிலிடுவோர்) வெற்றிடங்களை நிரப்பும் முகமாக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ. டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை, போகம்பறை ஆகிய சிறைச்சாலைகளில் தற்போது அலுகோசுக்கான இரு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இவற்றினை நிரப்புவதற்காகவே இந்த விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. எட்டாம் தரத்தில் சித்தியடைந்த 18 - 45 வயதுக்கும் இடைப்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பட்டாசு வெடிவிபத்தில் யாழில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் புத்தாண்டு தினத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வெடிவிபத்து சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பருத்தித்துறை பகுதி வீடொன்றில் தந்தையும் மகனும் சேர்ந்து வெடி கொளுத்திய வேளை தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் மகன் கண்ணில் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த ஆர்.நிசாந் (வயது - 5) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை மற்றுமொரு சம்பவத்தில் குருநகர் மௌன்காமன் வீதியைச் சேர்ந்த றிபேக்கா (வயது - 22) என்பவர் காயமடைந்துள்ளார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் அப்பகுதியில் புத்தாண்டு தினத்துக்கென வெடி கொளுத்திய வேளை தவறுதலாக அருகிலிருந்த வீட்டில் வெடி விழுந்து வெடித்ததினால் குறித்த வீட்டில் இருந்தவர் யுவதி மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முக்கிய சட்டமூலங்கள் நாடாளுமன்றுக்கு



(கொழும்பு)

ஐம்பது வருடங்களாக நிறைவேற்ற முடியாமற்போன சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய முக்கிய சட்டமூலங்கள் சிலவற்றை எதிர்வரும் இரண்டு மாத காலத்திற்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்

இந்த நடவடிக்கையால் இலங்கையின் இலவச சுகாதார சேவையை திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மலர்ந்துள்ள புது வருடத்தில் சுகாதார அமைச்சின் கடமைகளை ஆரம்பிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# வீதி விபத்தில் வயோதிபப் பெண் பலி


(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்ற வயோதிபப் பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அப்பெண் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 2.00 மணியளவில் கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. கல்வியங்காடு 3 ஆம் கட்டை வீதியைச் சேர்ந்த காசிநாதர் சாந்தினி (வயது - 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்,எப்.எஸ்)

# மகா வம்சத்தை திரிபுபடுத்த அரசியல்வாதிகள் முயற்சி



(கொழும்பு)

அரசியல்வாதிகள் மகா வம்சத்தை திரிபுபடுத்த முயற்சிக்கின்றனர் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு சென்றிருந்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மகாவம்சத்தில் எனது பெயரை எழுதமாட்டார்களாம், கோமாளிகளின் பெயர்களுடன் இணைத்து எனது பெயரையும் எழுதுவதனை விடவும் எழுதாமல் இருப்பது நல்லது.

பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மானின் பெயர்கள் மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை. இந்தக் கீழ்த்தரமான அரசியல்வாதிகள் மகா வம்சத்தையும் திரிபுபடுத்த முயற்சிக்கின்றனர்.என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# வெளிவாரி பட்டப்படிப்பினை நாய்கள் கூட மதிப்பதில்லை

## கூறுகிறார் உயர் கல்வி அமைச்சர்



(கொழும்பு)

இலங்கையின் வெளிவாரிப் பட்டப்படிப்பினை நாய்கள் கூட மதிப்பதில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் அரசியல் நியமனங்களை வழங்கும் போது பட்டப்படிப்பினை எவரும் கண்டு கொள்வதில்லை என பிலியந்தலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெளிவாரி பட்டப்படிப்பினால் எவருக்கும் எந்தவித நன்மையும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதில் உயர்கல்வி அமைச்சர் தீவிரம் காட்டி வருவதாக ஆளும் கட்சி உறுப்பினர்களே குற்றம் சுமத்தி வருகின்ற சந்தர்ப்பத்தில், வெளிவாரி பட்டக் கற்கைநெறிகளை நாய்களும் விரும்பாது என வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.